தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆண்டு சந்தா ரூ. 6—0—0

6 மாதச் சந்தா ரூ. 3—0—0

ள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 1	சென்னை 7—5—55 சனிக்கிழமை	இதழ் 45



பஜனைப்பாடல்! விசனக்குறி!

சென்ற கடிதத்தில் ' ஆந்திராவும் பொதுவுடமைக்கட்சியும்' என்பது பற்றி எழுதியிருந்தேன். போன தேர்தலில் பொதுவுடமையர் வெற்றிபெற்றதற்காக ஆந்திராவை பொதுவுடமைப் பூங்காவென்று கருதி விடமுடியாது என்பதற்கும், நேற்றைய தேர்தலிலே ஆந்திராவிலே காங்கிரஸ் வெற்றிபெற்றமைக்காக ஆந்திராவை காங்கிரஸ் கோட்டை என்று கருதிவிடக் கூடாது என்பதற்குமான காரணங்களை சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அவை ஓரளவு உனக்கு சாந்தியைத் தந்திருக்கும். உனது உள்ளறிவும் அதை ஏற்றுக்கொண்டிருக்கத்தான் வேண்டும். இந்தக் கடிதம்தான் பொதுவுடமைக்கட்சியைப்பற்றிய எனதுகடைசிக்கடிதம். அவர்கள் என் தென்னாட்டில் நிலையான ஓர் இடத்தைப் பிடிக்கமுடியவில்லை என்பதையும்; அவர்கள் பாதை கோணல் நிறைந்தது என்பதற்கான காரணங்களையும், அவர்களுடைய திட்டம், நம்முடைய திட்டம் இவை இரண்டுக்குமுள்ள வேறுபாட்டையும் இந்தக் கடிதத்தில் விளக்கிவிடலாமென முடிவுசெய்திருக்கிறேன். வழக்கமான என்னுடைய தமிழ்நடையை இதில் எதிர்பார்க்கமாட்டாய் என்று நினைக்கிறேன்; அவ்வாறு எதிர்பார்த்தாலும், நண்பனே நீ பெரிய ஏமாற்றமடைவாய்.

எந்த ஒரு காரியத்தையாவது, பொதுவுடமைக்கட்சியினர் தனித்து நின்று சாதித்ததுண்டா என்று, ஞர் அண்ணாவின் கட்டுரைகளைப் பார்த்த பின்பும்கூட அந்த ஜன சக்தியை(?)வைத்திருப்பவர்களுக்கு உதடு அசையவில்லை-உள்ளத்திலே ஈரல் விழவில்லை. 'அவரை இந்தச் சிறைக்கு மாற்றுங்கள்-அந்தச் சதி வழக்கை வாபஸ் பெறுங்கள்' என்றுதான் அவர்களின் ஏடுகளில் எழுதிவந்தார்கள்.

தென்னவர்களின் வீடெல்லாம் இதைப் பற்றித்தான் பேச்சு! நல்லவர்களில் உள்ளங்கள் இந்தந் திட்டத்தைத்தான் முற்றுகையிட்டிருந்தன. ஆனால், இந்தச் 'சீமான்புரம்' மட்டும் 'எதிர்ப்புக் குரலை' உரக்க எழுப்பவில்லை. 'இந்து' எழுதிய அளவிற்குக்கூட இவர்கள் எழுதவில்லை என்றால் வேதனையாக இல்லையா?

நாளுக்கொரு படை, நாசத் திட்டம் தீட்டிய ஆச்சாரியார் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. வேலுக்குக் கூர்படுத்தி விவேக மிக்க தலைவர் எழுச்சிக்கனல் கொட்ட தினம் தினம் எழுதிக் கொண்டிருக்கிறார். அயர்ந்தோரெல்லாம் கொதித்தெழுந்தனர்-'அறிவகம்' வந்தனர். 'நான், நான்' என்று படையில் சேரத்துடித்தனர். அப்போது இந்த 'முற்போக்கு வாதிகள்' இருந்த இடத்தைவிட்டு எழுந்து வரவில்லை. ஆனால்? ஆயிரக்கணக்கானவர்கள் சிறையேகி, புனிதமான கொள்கைக்காகப் போராடுகின்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டு காராக்ரக

ஆத்திரப்படாதே! அவர்கள் செய்த குழப்பத்திற்கு இன்னொரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். உனக்குத் தெரியும் திடீரென்று தோழர் ஜீவானந்தம் அவர்கள் இராமயண உபன்யாசகாரனது; தெருவுக்குத் தெரு, வட்டத்திற்கு வட்டம் காலட்க்ஷேபம் செய்ய ஆரம்பித்தார் அந்த 'மாஜி சுய மரியாதைக்காரர்'. முற்போக்குவாதிகளாச்சே நீங்கள் இராமாயணப் பிரசங்கம் செய்யலாமா என்று கேட்டால், 'உங்களுக்குத் தெரியுமா? இராமாயணத்தில் பொதுஉடமை இருக்கிறது' என்றார். ஓஹோ! அப்படியா என்று நாங்களும் மௌனியாக இருந்துவிடவில்லை. தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவியர் என்று ராமாயணம் சொல்லுகிறதே அது பொதுவுடமையா என்று கேட்டோம்; அண்ணனின் மணிமுடிக்காக தாயகத்தை மாற்றானிடம் காட்டிக்கொடுக்கும் 'விபீடணீசம்' தான் உங்களது 'கம்யூனிசமா' என்று கேட்டோம். அவர் பதிலும் தரவில்லை - பக்திப் பிரசங்கமும் ஓயவில்லை.

நாடகத்தடைச் சட்டம் வந்தது. சட்டசபையிலே தோழர் கோவிந்தசாமி சங்கநாதம் செய்தார். இராமனின் கோழைத்தனத்தை விளக்கினார்; இராவணனின் குண மேம்பாட்டை எடுத்துக்காட்டினார். ஆதரவு பெருகிற்று; அது நாள் வரை 'இராமயணப் பிரசங்கி'களாக இருந்தவர்கள் அன்று இராமா

கோள் என்றார்கள். திடீரென்று புரட்சியே எங்களுக்குப் பாதை என்று கொள்கையை மாற்றிக் கொண்டார்கள். இப்போது மீண்டும் வெண்புறாக்கள் எங்கள் தோள்களிலே என்கிறார்கள். இவ்வளவு சிக்கல்! இத்தனை முடிச்சுகள்! எப்படிக் கிடைக்கும் ஆதரவு? ஒன்று, கொண்டிருக்கும் கொள்கை சரியானதாக இருக்கவேண்டும்; நேர்மையானதாக இருக்கவேண்டும்; அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும்; அல்லது கொண்டிருக்கும் கொள்கையில் 'குரங்குத்தனத்தை' கைக்கொள்ள வேண்டும்; இரண்டு மற்ற இயக்கம் இயங்குவது இயலாது நண்பனே! இயலவே இயலாது!

என்னுடைய பேச்சை அப்படியே நம்பும்படி உன்னை வற்புறுத்தவில்லை. என்னுடைய இந்தக் கருத்துக்களை உனது நண்பர்களிடம் கூறு. அலசிப்பார்.

இப்போது அவர்களுக்கும் எங்களுக்கும் இருக்கும் அடிப்படைத் தகராறுக்கு வருகிறேன். நாங்கள் சமுதாயமே முதல் வாதம் என்கிறோம். அவர்கள் பொருளாதாரமே முதல் வாதமென்கிறார்கள்; அவர்கள் அதற்கு ரஷ்யாவைப்பார், மாஸ்கோவைக் கவனி, மாசேதுங்கின் மாண்பினை நோக்கு என்றெல்லாம்

தோல்விக்காதைகள் அவர்களுக்கு தொலையாத 'ட்ராஜடியா?'

உன்னை, இரண்டாவது கடிதத்தில் கேட்டிருந்தது உனக்கு நினைவிருக்கலாம். உடனடிப்பிரச்சினை, உடனடிப்பிரச்சினை என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொள்வார்கள்; அந்த உடனடிப்பிரச்சினைகளை யாவது செய்து முடித்திருக்கிறார்களா என்றால் விரல் மடக்க ஏதும் தென்படவில்லை. உடனடியாகத்தீர்க்காவிட்டாலும் காலம் கழித்துக் கூடசெய்து முடித்ததாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, பொதுவான ஒரு பிரச்சினை ஒன்றில்கூட அவர்கள் ஒன்றுசேர்ந்து பணியாற்ற முன் வந்தது கிடையாது; அதே வேளையில் பின்நின்று இடையூறுகள் செய்திருக்கிறார்கள். எங்கே, எப்போது என்பதை பின்னால் அறிவாய்.

புதிய கல்வித்திட்டம் ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டபோது பொதுவுடமையர் நடித்த நாடகமிருக்கிறதே அதுபோன்ற 'விபீடணப்படலம்' ராமாயணத்திலே கூட நடந்ததில்லை எனலாம். தக்கோரைக் கலவாத திட்டம்; தாசர்களை உருவாக்கும் திட்டம்' என்று திராவிடர் தலைவர் அண்ணா அறிக்கை விட்டபோதும்; 'கால்களை ஒடிக்கிறார்; கைகளை முறிக்கிறார்; பொதுமக்களே என்ன செய்யப் போகிறீர்கள்' என்று தி. மு. க. ...லைமை நிலையம், சுவரொட்டிகளை ...ங்கெணும் ஒட்டிவந்த போதும் ...தப் பொதுவுடமைக் கட்சியினர் ...வட்டமாக ஏதும் சொல்ல...லை; எழுதவுமில்லை. சோர்ந்த ...த்தினரையும், காய்ந்த ...னயாளரையும்கூட தட்டி ... தமிழர் சமுதாயத்தின் ...தைப் பாதிக்கும் திட்டம் ...திய கல்வித்திட்டம் ...தூண்டிய அறி

வாழ்வை மேற்கொண்ட பிறகு-காங்கிரஸ் முகாமிலேயே சில நல்லவர்கள் புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்த பிறகு, கல்வித்திட்டம் ஒழிக்கப்பட்டது. போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது இரட்டைப் படகில் கால்வைக்க எண்ணியவர்கள் பிறருடைய சேவையால்-தியாகத்தால் வெற்றி கிட்டிவிட்டது என்கின்றபோது அந்த வெற்றியில் எங்களுக்கும் பங்குண்டு என்றால் அதைத் 'தூய்மையான அரசியல் வாதம்' என்று நினைக்கிறாய்? பொதுவுடமைக்கட்சியினர் அப்படித்தான் செய்தார்கள். 'ஜனசக்தி' இதழில் கல்வித்திட்ட ஒழிப்பு குறித்து வெற்றி விழா கொண்டாடக் கோரினார்கள்! இதை நீ ஏற்றுக் கொள்கிறாயா? தமிழகத்து பாலர்களின் நலத்திலே நாட்டமிருந்தால் கட்சிவேறுபாடு பார்க்காமல்-கொடியின் நிறம், சின்னம் பார்க்காமல் களத்திலே குதித்திருக்கலாமல்லவா! ஒன்று, 'அகிலம்' பற்றி நாம் பேசுகிறோம், தமிழகமென்ன அதில் ஒரு அணு என்று அவர்கள் விட்டிருக்கவேண்டும். அல்லது தி. மு. கழகத்தினரோடு சேர்ந்தால் அந்த நேரத்தில் ஆச்சாரியாரின் அதிர்ப்திக்கு ஆளாக நேரிடுமே என்று அஞ்சியிருக்க வேண்டும்! அல்லது தமிழகத்தின்மீது அக்கறையே இருந்திருக்காது. இதில் நீ எதை எடுத்துக்கொண்டாலும் சரி! குற்றமா இல்லையா? மறைக்காதே நண்பா! இன்னொன்று! ஆச்சாரியாரின் கல்வித்திட்டம் வேண்டுமா, வேண்டாமா என சட்டசபையிலே வாக்கெடுப்பு நடந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் ராமமூர்த்தி ஏன் அன்று சட்டசபைக்கு வரவில்லை? இதைக் காட்டினும் முக்கிய வேலை என்ன டில்லி...?

யணத்தைக் கண்டித்துப் பேசத் தலைப்பட்டார்கள். பாகவதர்கள அப்போது ஏன் பகுத்தறிவாளர்களாக மாறவேண்டும்? ஜீவானந்தம் கையுயர்த்தி இராமகாதை கூடாதென்று பேசவேண்டிய நிலை ஏன் வந்தது? திராவிடர் இயக்கம் இராமாயணத்தை எதிர்க்காதிருந்தாலும் ஜீவாவும் எதிர்த்திருக்க மாட்டார். இது நிச்சயம் நண்பனே! உள் அந்தரங்கம் ஒன்று சொல்லுகிறேன். இராமாயணத்தை ஜீவா முதலில் போற்றிப் புகழ்ந்ததற்கும் அவருடைய பக்தியல்ல காரணம்; இராமயணத்தை ரஷ்யாவிலே மொழிபெயர்க்கப் போவதாக ஒரு திட்டம் இருந்ததாம் - அதற்காகத்தான் ஜீவா புகழ்ந்தாராம்! இது நம்பகமான செய்தி! இவர்களது ரஷ்ய மோகம் எப்படிப் பார்த்தாயா? கயற்றைப் பாம்பென்று ரஷ்யாக்காரன் சொன்னால் போதும் இங்கிருக்கிறவர்கள் 'ஆமாம்; நான் கூடப் பார்த்தேன் கண்ணாடிவிரியன்' என்பார்கள். மூடபக்தி! மூடபக்தி! அளவிடற்கரிய மூட பக்தி! இவர்களை நம்பி ஒரு சமுதாயம் பின்பற்ற முடியுமா?

இதுபோலத்தான் இன்னொரு வேடிக்கை செய்தார்கள், திருவாங்கூர் கொச்சிப் பகுதியில். பட்டம் தாணுப் பிள்ளையை ஒரு கை பார்க்கிறோம் என்றார்கள். அணிவகுத்தார்கள். இடையிலே இருமுறை சூரியன் வந்து போனான்; இருட்டும் வந்தது! எப்படியோ பட்டத்தை சகதோழனாக்கிக் கொண்டார்கள். இப்படி ஒரு 'கோர நடனம்'!

காலத்தால் குறுக்கிடும் போராட்டங்களில்தான் இப்படி என்றால், அடிப்படையிலும் எத்தனை மாற்றங்கள்! சமாதானமே எங்கள் குறிக்

பேசுகிறார்கள். அதையெல்லாம் நாங்கள் ஒப்புக்கொண்டோம். ஒப்புக்கொண்டோம் என்றால் பொருளாதார சீர்திருத்தத்தால்தான் அங்கெல்லாம் வளம் பெருகிற்று என்றல்ல! இப்போது அந்த நாடுகளில் சுகவாழ்வு பரிணமிக்கிறது; ஆனால் அந்த சுகம் பொருளாதார வாதத்தால் அல்ல என்பதுதான் எங்களது வாதம். ரஷ்யாவிலே இன்று பொருளாதார சமத்துவம் ஓரளவு ஏற்பட்டிருக்கிறதென்றால் அதற்கு மூலகாரணமென்ன? ஸ்டாலினின் பொருளாதாரப் புரட்சியா? லெனின் காலத்து எழுத்தாளர்களும், அதற்கு முந்திய சமுதாயச் சீர்திருத்தச் சிற்பிகளின் எழுத்துப் பணியும்தான் என்பது எங்களது கூற்று. டால்ஸ்டாய், செகாவ் போன்றவர்களின்புதுமைக் கருத்துக்கள்தான்-புரட்சி எண்ணங்கள்தான் தரிசு நிலமாகக் கிடந்த ரஷ்ய மண்டலத்தை உழுது, பண்படுத்தி பயிர் விளையும் கழனியாக்கி பொருளாதாரப் புரட்சிக்கு பக்குவப்படுத்திக்கொடுத்திருக்கின்றன என்கிறோம். ஒரு டால்ஸ்டாய் தோன்றியிராவிட்டால்- ஒரு செகாவ் தலையெடுக்கவில்லையானால் ரஷ்யாவிலே இன்று பொதுவுடமை வாதத்தை கேட்கமுடியாது, நீ சரித்திரம் படித்தவன், வெளிநாட்டு இலக்கியங்களிலே உனக்கு அலாதி ஆசை! நீயே சொல்! ரஷ்யா புதுவேகம் பெற்றவுடனேயே பொருளாதார சீர்திருத்தத்தையா சிந்தனைக்கு எடுத்துக்கொண்டது? அறியாமை

(9-ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

கண்ணதாசன்

திராவிட மக்களுக்கு இப்போது விசித்திரமான அனுபவம் ஏற்பட்டு வருகிறது; ஏக இந்தியா சத்தத்தோடு காங்கிரஸ் தொட்டியிலே கிடக்கிறவர்கள், சின்னவர்கள்-பெரியவர்கள் எல்லோருமே இந்தி மொழி ஆதிக்கத்தை முழுமூச்சாக எதிர்க்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். மஞ்சுவிரட்டிலே தாரை, தப்பட்டை முழக்கி, மாடுகளை உற்சாகப்படுத்துவதுபோல, இந்தியை உற்சாகப்படுத்த வேண்டியவர்கள், புதிய முறையில் இந்த வழியிலே பயணம் தொடங்கி இருப்பது, பொதுமக்களைப் பேராச்சரியத்தில் மூழ்க வைத்திருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் என்னவாயிருக்கும்? தென்னாட்டிலேஇந்தியை ஆடவிட முயற்சித்த பிரதான நட்டுவனாராம் ராசகோபாலாச்சாரியாரிலிருந்து, வி கே. கிருஷ்ணமேனன் வரையில், எல்லோருமெ அதை கண்டிக்க ஆரம்பித்திருப்பதற்குக்காரணமென்ன? இவ்வளவு நாட்களாக இல்லாத புத்தி இப்போது திடீரென வந்துவிட்டதா? அல்லது இதுவரை நாம் சொல்லிவந்த கருத்தைத் தங்கள் கையிலே தூக்கிவைத்துக்கொள்வதன்மூலம், இந்தப் பிரச்சினையிலே நாம் பிடித்துக்கொண்டிருக்குமிடத்தை, தாங்கள் பறித்து வைத்துக்கொண்டு, பொதுமக்கள் கண்ணிலே, தாங்கள் இனமொழிக்கு ஆக்கம் தருவதாகக் காட்டிக்கொண்டு, அலைமுழுதும் அடங்கிய நேரம் பார்த்து, இந்தி மொழி ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிடப் பார்க்கிறார்களா?

ஒருவேளை இவர்கள் நல்லெண்ணத்தோடு இக்கருத்தை வெளியிட்டிருந்தாலும்கூட இந்த சந்தேகம் யாருக்கும் வருவது இயற்கை. அந்த அளவுக்கு இவர்கள் இந்தியை ஆதரித்துக்கொண்டிருந்தார்கள். 'பச்சோம்-கி-கித்தாப்' பிலிருந்து பத்துவீசை கனம்உள்ள இந்திப் புத்தகம் வரை அனைத்தையும் ஒரேயடியாக திராவிடமக்களின் தொண்டைக்குள்ளே திணித்துவிட முயன்றவர்கள் இவர்கள். 'இந்தியாவுக்கு ஒரே பொது மொழி-அது இந்திதான்' என இடைவிடாது முழங்கியவர்கள் இவர்கள். வடநாட்டிலுள்ள கோபாவேச இந்தி வெறியர்களைக் காட்டிலும், அதிபயங்கர உருவெடுத்து, பூசாரிகளாய் நின்றவர்கள் இவர்கள்.

இந்தி பொது மொழியானால், அது மற்ற மொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் என்பதே தவறு என்று வாதித்தவர்கள் இவர்கள். இப்போது இந்தியாவுக்கு ஒரு பொதுமொழியே இருக்க முடியாது என்கிற அளவுக்கு வந்து நிற்பானேன்?

முன்பு இந்தியை ஆதரிக்கும் போதெல்லாம் இது வெறும் பேச்சுத்தானே, நாமும் பேசி வைப்போம் என்று பேசிவிட்டு, திட்டம் விசுவரூபம் எடுக்கிற நேரம்பார்த்து, தங்கள் இதயத்தின் அடித்தளங்களிலே தூங்கிக்கொண்டிருந்த எண்ணங்களைத் தட்டி யெழுப்பி, கொட்டி அளக்கிறார்களோ ஒருவேளை? எது எப்படியோ போகட்டும் விரும்பியோ விரும்பாமலோ, வர முடியாத வாய்களிலிருந்து உணர்ச்சிமிக்க வார்த்தைகள் 'மேளதாளத்தோடு' வந்து விழுந்திருக்கின்றன.

கிருஷ்ணமேனன் பல படிகள் மேலே போய், ஒருநாட்டின் பொது மொழி என்பதற்கும், ஒருநாட்டின் ஒற்றுமை என்பதற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன என்பதைப் பற்றி தவறான கருத்துக்கள் இருக்கின்றன என்று கூறி, காரணங்களையும் எடுத்து விளாசி இருக்கிறார்.

ஆடு, மாடு, குதிரை, சிங்கம் அனைத்தையும் ஒரே கயிற்றிலே கட்டிவைப்பதன்மூலம் அனைத்துள்ளும் ஒற்றுமை ஏற்படுத்திவிட முடியாது என்பது அவர் பேச்சின் உதாரணப் படமாகும்.

மனப்பூர்வமாக இல்லாத ஒற்றுமையை மொழிப் பூர்வமாகக் கொண்டுவர முடியாது - அந்த மொழியை வலுக்கட்டாயத்தின் பேரில் எல்லோர் மேலும் சுமத்துவதன்மூலம் என்பதை தெள்ளத் தெளிய எடுத்துக் கூறியிருக்கிறார். 'இதன் உள்ளார்ந்த கருத்து ஒரே அடிப்படைக் காலச்சாரம் உள்ளதல்ல இந்திய உபகண்டம் என்பதாகும். வெவ்வேறு இனங்கள், வெவ்வேறு நாகரீகம், வெவ்வேறு மொழி, வெவ்வேறு நாடு என்னும் அமைப்புத்தான் இந்தியா என்று சொல்லப்படும் நிலப்பரப்பு என்பது அவர் சொல்லாமலே, அவர் பேச்சில் காணப்படும் கருத்தாகும். நம்மைப்போல் வெளிப்படையாகச் சொல்லமுடியாத காரணத்தாலே முக்கி முனகியிருக்கிறார். அந்த முனகலை இந்தி வெறியர்கள் நன்றாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அதைவிட்டு, உள்ளுக்குள் இருப்போரின் வாயைக் கட்டிவிட்டு தென்னாட்டில் இந்தியை வேர் பாய்ச்சப்பார்ப்பார்களானால் விளைவு கடுமையாய் இருக்கும். கடுகளவாவது புத்தியுள்ளவர்கள் அந்த நிலைமைக்குக் கொண்டுவந்து நிறுத்தமாட்டார்கள். இந்தி வெறியர்களுக்கு அது இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

★

புரிந்துகொண்டாரா?

மேனன்

புதுத்துணிவு பெற்றாரா?

பண்டிதரின் நண்பர் பேசியிருக்கிறார்; பலநாடு சுற்றி மொழிநிலை அறிந்து தன் கருத்தை வெளியிட்டிருக்கிறார் கிருஷ்ணமேனன். இந்தி மொழி குறித்து மேனன் அவர்கள் நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற வழக்கறிஞர் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டதை கீழே தந்திருக்கிறோம். படிக்கட்டும் பாரதப் புதல்வர்கள்.

"இந்தியா போன்ற நாட்டுக்கு ஒரு பொது மொழியை வைத்துக்கொள்வது என்பது இயலாததாகும்; சென்ற மூன்று ஆண்டுகளிலே ஒரு உண்மை புலப்பட்டிருக்கிறது; 'இந்தியாவின் ஒரு தேசிய மொழி' என்று நாம் பேசக்கூடாது; 'இந்தியாவின் தேசிய மொழிகள்' என்றுதான் நாம் பேச வேண்டுமென்பதே அந்த உண்மை."

"ஒரு நாட்டின் பொது மொழி என்பதற்கும், நாட்டின் ஒற்றுமை என்பதற்கும் இடையே உள்ள தொடர்பு என்னவென்பதைப் பற்றி தவறான கருத்துக்கள் இருக்கின்றன."

"பொது மொழி என்பதற்கு இன வாரியாக மூலாதாரம் இருக்கிறதென்று முடிவு செய்வதுகூடாது; அதுபோலவே பொது மொழி ஒன்று இருப்பதால், 'ஒற்றுமை இருக்கிறது,' என்று கருதக்கூடாது; ஆனால், அதற்கான பொது மொழி ஒன்றை அமைக்க முயற்சிக்காமல் இருக்கவேண்டுமென்பதில்லை. மனிதர்தர்களிடையே உணர்ச்சிகளைப் பரிமாற வசதி அளிப்பதால், பொது மொழியின்மூலம் மக்களைச்சந்திக்க வாய்ப்பு ஏற்படலாம்; என்றாவது ஒருநாள், இந்தியாவின் மொழிகள் அனைத்தையும் ஒரே லிபியில் எழுதும் நிலை ஏற்பட்டால் நல்லது."

"இந்தோனேஷ்யா, இந்தோசைனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் மொழிகள் அனைத்தும் ஒரே 'லிபி'யில் எழுதப்படுகின்றன என்பது உண்மைதான்; ஆனால் அந்த மொழிகளுக்குப் பின்னால் பெரியதோர் சரித்திரமே இருக்கிறது; அந்தச் சரித்திரம், இந்திய மொழிகளுக்குப் பின்னால் கிடையாது."

"நமது நாடு போன்ற ஒரு நாட்டிற்கு ஒரு பொது மொழி இருப்பதென்பது இயலாத ஒன்றாகும். தென் அமெரிக்காவில் கூட, வடபகுதியில் பேசப்படும் மொழிக்கும், தென்பகுதியில் பேசப்படும் மொழிக்கும் மாறுபாடுகள் உள்ளன. சட்டத்தின் மூலம் ஒரு பொது மொழியை உருவாக்க முடியாது. அடுத்து வருகிற இருபத்தைந்து ஆண்டுகளில், தெற்கே இருப்பவர்கள் வடக்கே இருப்பவர்களைக் காட்டிலும், இந்தி மொழியை இலக்கியப் பண்புகளுடன் பேசலாம்; ஆங்கில மொழியை ஆங்கிலேயர்களைக் காட்டிலும் திறமையாகப் பேசியதுபோல் பேசுவார்கள். ஆனால் அந்த நிலைமை ஒரு பொது மொழியை உருவாக்கி விடாது."

"ஏதாவது ஒரு பொது மொழி உருவாக வேண்டுமென்றால், அது தானாகவே உருவாகவேண்டும்; கட்டாயத்தின் மூலமாகவோ, அல்லது சட்டத்தின் மூலமோ அதை உருவாக்க முடியாது."

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 8

ஈற்றடி : "நாதத்தில் இல்லை நயம்!"

முடிவு தேதி 14-5-55

அடுத்த இதழில்!

- ◉ பேராசிரியர் விழா காட்சிகள்
- ◉ சேலம் காட்சிகள்
- ◉ மனைவியின் விலை

(சிறுகதை)

இலக்கியத்தில் காதல்

தமிழ் இலக்கியங்களுள் அமைந்துள்ள சிறந்த காட்சிகளும் விழுமிய கருத்துக்களும் பலவாகும். சிறந்த காட்சிகளையும் விழுமிய கருத்துக்களையும் கொண்ட பாடல்கள் பலவற்றிற்கு ஆசிரியர்தம் இயற்பெயர் காணப்படவில்லை. நயமும் சுவையும் பொருந்த நல்ல காட்சிகளைப் பாடலில் பொதிந்து பாடும் ஆற்றல் பெற்ற பெரும் புலவர் தங்கள் பெயரை அறிவியாது இருந்தனரோ, அன்றிப் படிஎடுக்குங் காலையில் மறைந்து போயினவோ தெரிந்திலது. எங்ஙனமாயினும் பாடல்கள் மறையாதுள்ளன. அப்பாடல்களில் அமைந்துள்ள அழகிய காட்சியை மனத்திறுத்தித் தொகுத்தோர் ஆசிரியர்க்குப் பெயரிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இங்ஙனம் அமைந்துள்ள பாடல்கள் பல. அவற்றுள் ஒன்றனை இங்குக் கண்டு மகிழ்வோம் :

கடற்கரையில் அமர்ந்துள்ளார் புலவர் ஒருவர். அவர் அமர்ந்துள்ள இடமோ நீரலைகள் மோதும் கரை. அவரின் பார்வையில் படும் நிலையில் சிறு பாறை ஒன்று கரையினும் சற்றே விலகி எப்பொழுதும் நீர்படும் நிலையில் அமைந்துள்ளது. கடற்கரையில் அமர்ந்து சிந்தனை உலகில் வாழ்ந்த அவர், சற்றே விலகி, பாறையினைக் காணலானார். சிறுபறை எனற எண்ணத்தோடு அவர் கூர்ந்து பார்த்தார். அலைகள் சதா மோதியதால் ஏற்பட்ட பாசி படர்ந்த பாறையின் மேற்புறம் அழகாக விளங்குவது அவர் உள்ளத்தை ஈர்த்தது. அலைகள் வேகமாகப் பறைமீது மோதுவதையும், அதனால் உண்டாகும் நீர்த்துளிகளும் நுரையும் மெல்ல மெல்ல மறைவதையும் பார்த்தார். மீண்டும் சிந்தனையில் ஈடுபட்டார். வேகமாக அவரின் கற்பனை அறிவு வேலை செய்தது. தாம் கண்ட காட்சியை என்றும் அழியா நிலையில் ஓவியமாக்கி விட வேண்டும் என்ற பேராசை அவருக்கு. அவருடைய விழைவு சிறந்ததாக இருந்ததால் நிலைபெற்றது.

“பிரிவதா, உன்னை விட்டா? முடியாது--முடியவே முடியாது” என்று கூறிய தலைவன், தன்னை விட்டுப் பிரிந்துவிட்டானே என்று எண்ணியவளாய் வருந்தியமர்ந்துள்ளாள் தலைவி. தன்னைவிட்டுப் பிரிந்தவன் வந்து தன்னை மகிழ்விப்பானோ அன்றி வாராதொழிவானோ என்ற அச்சம் அவளுக்கிருந்தது. எந்தவிதமான ஆறுதலுரையும் அவளுக்குப் பயன்பட்டிலது. துயரமே வடிவாய் அமைந்தவளாய் இருந்த தலைவிக்குத் தானெனும் துணையாயிருந்து, அவள் துயரத்தைக் குறைக்க வேண்டுமென எண்ணுகிருள் தோழி.

பெற்ற தாயைவிட, வளர்த்த செவிலியை விடத் தலைவியின் நல்வாழ்வில் கருத்துடையவள் தோழியே ஆவாள். எனவேதான், துணிந்து தலைவியின் துயர் களையப் புறப்பட்டாள்.

“தோழி, நீ உலகியலை அறிந்தவளாயிற்றே. தலைவன் நம்மை விட்டுப் பிரிந்தான் என்பதற்காக நீ வருந்தியவாறே இருக்கலாமா? ...ர்ந்து வருந்தும் நீ, தலைவன் ... உறவுடையவனாயிருந்த போது தொடர்ந்து பெற்ற இன்பத்தை எண்ணிப்பார். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவன என்பது நீ அறியாததல்லவே. இருந்தும் துயர் நீ கொள்வது சரியல்ல தோழி. பிரிந்தவர் வருவார். அவர் நம்பால் அளவற்ற அன்பு கொண்டவர். அவசியம் நோக்கி நம்மைப் பிரிந்தவர், நம்மின் நினைவாகவே இருந்து விரைவில் மீள்வார். அஞ்சாது நீ கடமையைச் செய்யப் புறப்படு. கவலையைத் துரத்தம்மா”, என்று உருக்கமாகக் கூறுகிருள் தோழி தலைவிக்கு ஆறுதல்.

ஆனல் தலைவியின உள்ளமோ தோழியின் ஆறுதலுரையை ஏற்க மறுத்தது. தான் பெற்ற துயரத்தின் தன்மையை அறியாது, துயர் நீங்கி, கவலையைத் துரத்தி அச்சமில்லாது. கடமையைச் செய்யப் புறப்படு என்று அழைக்கும் தோழியை அவள் கொடுமையின் உருவாகக் கருதலானாள். தான் கொண்ட காமத்தின் தன்மையை உணரும் ஆற்றல் இல்லாதவர்கள், ‘துயர் நீங்கி வாழ்’ என்று கூற எங்ஙனம் தகுதி பெற்றவர் என்ற ஆராய்ச்சியிலும் தலைவி ஈடுபடுகிருள். இவ்வளவும் சேர்ந்து அவளுக்கு வருத்தத்தையே அளித்தன. இதுகாறும் குனிந்தவாறே இவ்வளவும் எண்ணி வேதனைப்பட்டவள் நிமிர்ந்து பார்த்தாள்; ஆறுதலுரை கூறிய தோழி நிற்கக் கண்டாள்; தன் துயரெல்லாம் குறைய தோழியிடம் பேசத் தொடங்கு கிருள் :

“நான் பெற்ற காமநோயைப் பொறுத்து அதனை மற என்று கூறி வற்புறுத்துவோர் அதன்தன்மையை அறியாதவர்களா தோழி! அல்லது அறிந்தும், நெஞ்சத்தைக் கல்லாக்கிக்கொண்டு இரக்கமற்ற நிலையில் நடந்ததை மறந்து கவலையைத் துரத்து என்று கூறுகிருர்களா? எவ்வாறு கண்டவர்கள் கூறினுலும் யான் அவர் தம் உரைக்குச் செவி சாயேன். என் அன்புத் துணைவரை நான் காண வில்லையானல், **பாறைமீது மோதும் நீர்நுரை மெல்ல மெல்ல அழிவது போல** தலைவர் பிரிவை எண்ணுந் தோறும் மெல்ல மெல்ல என் உயிர் தேய்ந்தொழியும் என்கிருள். இது தலைவியின் கூற்றாய் அமைந்துள்ள பாடல்.

தலைவன் பிரிந்த துயரால் ஆற்ருது வருந்தும் தலைவிக்குத் தோழி, “ஆற்றியிரு. பிரிவதும் வருவதும் இயல்பு” என்று உல கியல் பேசியபோது, உள்ளம் பொ... தும் வருந்தியவளாய்த் தலைவி பேசும் பேச்சே மேலே கண்டது. இப்பாடலில் அவலச்சுவை சிறந் துள்ளது.

“மெல்ல மெல்ல இல்லாகுது... மே” என்று கூறும் தலைவியின... நாம் எண்ணிப் பார்க்குங்கா... வருத்தம் கொள்கின்ருேம். அவளுடைய அன்புள்ளத்திற்கு நாம் வணக்கம் செலுத்த வேண்டியு... ளது.

கல்லில் பொருது மெல்ல மெல்... மறையும் நுரையினைப் புலவா... தலைவனைக் காணுமையால் வருந்... வருத்த மிகுதியால் நலமற்று... மெல்ல மெல்ல இறந்துபோக எ... ணும் தலைவிக்கு ஒப்பிட்டுள்ள... சிறந்த ஒன்ருகும்.

இவ்வாறு, தாம் கண்ட இய... கைக் காட்சியோடு வாழ்விய... இணைத்துப் பாடிய புலவர் யாரே... தெரிந்திலது. எனினும் தமிழு... கம் அவர்க்குத் தக்க ஒரு பெய... அளித்துப் போற்றத் தவறவில்லை...

(10-ம் பக்சம் பார்க்க)

தீராத வேதனை !

அங்கத்தினர்களின் கர்ஜனையால் மன்றமே அதிர்கிறது. ஏழாண்டு காலமாக கோலோச்சிக் கொண்டிருக்கும் ‘ஏகஇந்தியா’ ப்பேர்வழிகள் தீண்டாமை குறித்து இன்னும் பேசிக்கொண்டிருக்கிருர்கள்பாராளுமன்றத்தில்.

“ தீண்டாமை ஒழியவேண்டும் ! தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் ! தீண்டாமையை அனுஷ்டிப்போரை தண்டிக்க வேண்டுப் ! அவர்களை சிறையில் த்ள்ளவேண்டும் !”

இப்படியெல்லாம் தேசிய த்திருவாளர்கள் டில்லியில் முழங்கியிருக்கிருர்கள். நமது கக்கனுர்கூட இந்த முழக்கத்தின் ஒலியைப் பெரிதாக்கி இருக்கிருர்.

எந்த லட்சியத்தை வைத்து சமுதாயத்தின் பெரும்பகுதி மக்களின் ஆதரவை காந்தியார் பெற்ருரோ, எந்த இலட்சியத்திற்காக அந்தப் பெரியவர் அல்லும் பகலும் உழைத்தாரோ அந்த இலட்சியம் காந்தியாரின் சீடர்களால் இன்னும் கவனிக்கப் படவில்லை! பரிதாபத்திற்குரிய நிலைமை இது! உலக நாடுகளுக்கெல்லாம் ‘மத்தியஸ்தம்’ செய்துவைக்கப்போகும் ‘மாமனிதர்’ நாட்டில் தீண்டாமை ஒரு கேள்விக்குறியாகி விட்டது. எந்த நாட்டான் என்ன ஆயுதம் புதிதாகத் தயாரித்துக் கொண்டிருக்கிருனே, அந்த ஆயுதத்தை எங்கே பிரயோகிக்கிருனே என்றெல்லாம் கடல்கடந்துள்ள நாடுகள் - விஞ்ஞான நாடுகள் எண்ணி எண்ணி பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றன; ஆனுல் அதே நாட்டவர்களால் பெரிதும் மதிக்கப்படுகிற ஜவகர்லால் நேருவின் நாட்டில் மனிதனை மனிதன் தொடலாமா கூடாதா என்ற தகராறை பாராளுமன்றம் வாதித்துக்கொண்டிருக்கிறது.பாண்டுங் மாநாட்டின் மேடையை அலங்கரிக்கிருர் பண்டிதர். ஆனுல் அவருடைய பாராளுமன்றத்தில் ‘சுட்டி மொட்டையா எட்டிநில்லேண்டா’ பிரச்சினை ! இதை வெளிக்காட்டிக் கொள்ள வெட்கமாகத்தானிருக்கிறது. என் செய்வோம்! இந்திய அரசியல் சட்டம் என்ற‘வேதப்புத்தகம்’நம்மையும் பேசத்தான் வைக்கிறது.

தீண்டாமை குறித்து ஆவேசத்துடன் பேசுகிருர்கள் அகில இந்தியப் பிரமுகர்கள். ஜாதி யிரண்டொழிய வேறில்லை என்று வான்முட்ட முழங்குகிருர்கள். அதே தலைவர்கள்தான் அஸ்தி கரைக்க ஆற்றங்கரை நோக்கி ஓடுகிருர்கள். இந்தியர் சமுதாயம் ஏழையர் சமுதாயம்; ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் என்கிருர் ராஜேந்திரர், அதே ராஜேந்திரர்தான் பார்ப்பனர்களின் காலைக் கழுவி, பாத காணிக்கை வைத்து ஆசி வேண்டி நிற்கிருர் கைகட்டி வாய்பொத்தி !

சாக்கடைக்கிடங்கை மூடாமல் ஜவ்வாதுச் சிமிழை மட்டும் எத்தனை நாளைக்கு பயன்படுத்திக் கொள்ளமுடியும். வைதீக விருக்ஷத்தின் விழுது தீண்டாமை, விழுது விருக்ஷத்திற்கு பலமூட்டும். வைதீகத்திற்கு பெருமை தரும் ‘தீண்டாமை வாழ்ந்து தான் ஆகவேண்டியிருக்கிறது வைதீக வாழ்வால் சுகம் கண்டவர்கள் அந்த சுகத்திற்கு வழிவகைகளைச் செய்து தரும் தீண்டாமையை எப்படி ஒழிக்கமுயலுவர்? திருடன் களவாடுதல் கொடிது என்ரு சொல்லுவான்! சொல்லுவான் பகட்டுக்காக! ஆனுல் பூனை இருட்டை வேண்டாமென்று சொல்லவே சொல்லாது.

இந்திய சர்க்கார் தீண்டாமையை வன்மையாகக் கிருர்கள்! கண்டனம் தேவைதான். ஆனுல் அவர்களே தீண்டாமையை வளர்ப்போருக்கு ஆதரவு தரும்போது ? சட்டத்தால் என்ன செய்ய முடியும்? சட்டத்தைத் துணையாக வைத்துக்கொள்ளலாமேயன்றி சட்டத்தையே தளபதியாக்க முடியாது. மதுவிலக்கு பிரச்சினையில் அந்தத் தளபதி மண் கவ்வியதே போதும்! சர்க்கார் முதலிலே தீண்டாமையை பெற்றுவிடும் வைதீகச் சடங்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.கோயிலிலே வடகலையா; தென்கலையா? போன்ற தகராறுகளை உயர் நீதி மன்றம் வரை கொண்டு வர விடக்கூடாது. சமுதாயத்தின் அடிப்படைக் கோளாறுகளைப் பிய்த்தெறியவேண்டும்.

மேவார் கண்ணகி

கண்ணதாசன்

"அன்னை பவானியறியச் சொல்கிறேன். காதல் எனும் காந்த சக்தியில் வயப்பட்டு நாடு, நகரம், சுற்றம் அனைத்தையும துறந்து உம் ஏற்றத் தாழ்வில் பங்குகொள்ளச் சம்மதிக்கிறேன். ஒரு பெண் சுலபமாக எட்டிப் பிடித்துவிட்ட இந்தத் தைரியம் உம்போன்ற ஆண்களுக்கு ...... ?"

"வெகு தூரத்திலில்லை சித்ரா ! ஆனல்...... ஒரு ஏழைக் கவிஞனின் இதயத் துடிப்புக்கு இசைந்துவிட்ட குற்றம் மேவார் ராணுவின் தங்கையால் செய்யப்படவேண்டாம்" என்று ஊரிலுள்ள அனுதைச் சிறுக்கிகள் தூற்றுவார்களே என்றஞ்சுகிறேன்."

"பழுதுபட்ட நெஞ்சோடு அழுது வடியும் அந்த அனுதைச் சிறுக்கிகளை எண்ணிப் பொழுதைக் கழிக்க வேண்டாம் ! புறப்படுங்கள் ! ஊர் உறவு என்ற பாசத்தை வீசியெறிந்து விட்டுப் புறப்படுங்கள் ! இவ்விரிந்த உலகிலே பரந்த மனேபாவமுடையவர்கள் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். மாசு மருவற்ற காதலை மேவார் ராணு அங்கிகரிக்காமல் போகலாம். காதல் பொருளறியார் காமமெனத் தூற்றலாம ; உண்டகத்துக்கு இரண்டகமென ஓயாமல் பிதற்றலாம் ! அது ஒன்றுமறியாதவர்களின் ஒட்டப் பேச்சு ! உண்மைக்குப் புறம்பான உன்மத்தர் கூற்று ! கவிஞரே ! நீதியறியா ஜனசமுதாயத்தில்--நம் நிலை தெரியா க்ஷத்திரிய சமூகத்தில் இனி நமக்கு இடம் வேண்டாம். போவோம், புறப்படுங்கள்!"

"எங்கே போவது சித்ரா ?"

"கட்டிய புருஷனை விட்டுவிட்டுக் கண்ணன் என்னும் சோரனுடன் கூடியாடி, குலப் பெருமையைக் குலைத்துவிட்ட வேசி மீரா வாழ்ந்த இந்த நாட்டிலும் வாழவேண்டாம். ஐந்துபேருக்கு அழியாத பத்தினியாகி ஆருவது ஒருவனை மனத்தால் நினைந்த பாஞ்சாலிக்குக் கோயில் கட்டும் பாதகர்கள் வாழும் பகுதிக்கும் போகவேண்டாம் ! கவிஞரே ! அன்று நீர் சொன்னீர், "பிறந்த நாட்டைக் காட்டி கொடுப்பவன் பெற்ற தாயைக் காட்டிக் கொடுப்பவன்" என்று. செஞ்சோற்றுக் கடன் கழிக்கத் திண்டாடி வகையற்று, மாற்றானுக்கு இடம் கொடுத்தவீடணத்துரோகி வாழ்ந்த தென்பகுதிக்கும் போகவேண்டாம்! கண்ட பெண்களைப் பெண்டாள எண்ணிய கடவுள் வசிக்கும் இமாசலத்திற்கும் . போக வேண்டாம் ! கங்கைக் கரையிலே இப்பாதகர்களின் காலடிபடாத இடத்திலே வாழ்க்கையை நடத்துவோம் !"

"சித்ரா ! உன் கோபம்......?"

"......கங்கைக் காற்று உடலிற் படும் வரை தணியாது !"

"சரி இதோ புறப்பட்டுவிட்டேன்!"

★

"சித்ரா !"

"என......?"

"நாம் வந்து இத்தனை நாட்களாகியும் அதோ தூரத்தே தெரியும் குடிலைப் போய்ப் பார்த்ததில்லையே ......?"

"இப்பொழுதே போவோம் சுவாமி ?"

★

"அது ஒரு கதை அம்மா...... ஆமாம், நீங்கள் யார்?"

"நாங்கள் மேவாரில் பிறந்தவர்கள். அமைதியை நாடிக் கங்கைக் கரையில் வசித்து வருகிறோம் ! தங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தோம். தங்கள் விருத்தாந்தம் எங்களுக்குத் தெரிவதில் விருப்பமில்லாவிட்டால்......?"

"விருப்பமில்லாமலென்ன? பட்ட துன்பத்தைப் பிறரிடம் சொல்வதால் ஒரு ஆறுதல் ! அம்மா ! நானும் மேவாரில் பிறந்தவள் தான் ! என் தந்தை ஒரு ஏழைச் சிற்பி ; மேவார் அரண்மனையில் தான் வேலை பார்த்து வந்தார். நான் அப்பொழுது அடிக்கடி அரண்மனைக்குச் செல்வது வழக்கம். ராணு அமரசிம்மர் என்னிடம் அன்பாக இருந்தார். முடிவு காதல் ! காலத்தின் மகத்தான மாற்றம் எங்களைச் சதிசெய்து பிரித்தது. என் உரிமையை சித்தூர் இளவரசி உடைமையாக்கிக் கொண்டாள். ஏமாற்றப்பட்ட நான்......!"

"போதும்...! போதும்... ! நான் போகிறேன் !"

சித்ரா !

கிழவி சிரித்தாள்; ஒரு அகண்டாகாரமான பேய்ச் சிரிப்பு !

★

அன்றிரவில் !

"சுவாமி !..."

"என்ன சித்ரா ?"

"உ...ம்...தங்கள் அன்பு முழுமையும் என்னிடம் தானே ?"

"சந்தேகமென்ன, சித்ரா ?"

இல்லை, என் தந்தையின் கதை தானே கிழவி சொன்னது !"

ஒரு நாழிகை கழித்து,

"சித்ரா !"

"என்ன சுவாமி ?"

"உ...ம்...நீ என்னைத் தவிர வேறு ஒருவரையும்...?"

"மனதாலும் நினையேன் சுவாமி !"

"இல்லை ;...நமது நாட்டுச் சண்டாளி மீராவின் ஞாபகம் வந்தது!"

"களங்கமற்ற கங்கை !"

"ஏதோ சொல்கிறதே ?"

"......?"

"மீராவால் ஏற்பட்ட களங்கம் சித்ராவால் தீர்ந்தது !" என்று சொல்கிறது.

ஆம்...! அவள் தான் மேவார் கண்ணகி !

அன்பே வா !

*நிலவு, தனது தண்ணொளியைப் பரப்பவிடாதபடி
மேகக் கூட்டம் சூழ்ந்து திரிகின்றது. இடியும் மின்ன
லும கண்களையும காதுகளையும் தொலைக்கின்றன. ஆந்தை,
தனது கோரக் குரலெடுத்து கடுமையாகஒலிக்கிறது. கார்
காலம் வந்துவிட்டதென்பதன் அறிகுறியாகத் தவளைகள்
பாட்டுடன் தாளமும் போடுகின்றன. தென்னவர்க்கு
அரசியலில் தொல்லை தருவதுபோலவே இயற்கையிலும்
வடக்கு தொல்லை தருகிறது. இல்லையென்ருல், தென்றல்
சுவை யூட்டுவதாகவும் வாடை அல்லல் தருவதுமாக
இருக்குமா ? வடக்கு என்ருலே தொல்லை என்றுதான்
பொருளோ ? அன்பே ! அந்தக் குளிரின் கொடுமையை
என்னல் பொறுக்கமுடியாது. உன்னையின்றி என்னல்
இருக்கவும் முடியாது. வந்துவிடு ! அன்பே ! வா !*

*அத்திமரங்களில் காய்கள் காய்க்கத் தொடங்கி
விட்டன. மரங்கள் அனைத்தும் தமது, பழைய உடை
களைக் களைவதுபோன்று, முதிர்ந்த இலைகளை வீசிஎறிந்து
விட்டுத் தளிர்விட ஆரம்பிக்கின்றன. குளங்களில்
தாமரையும் அல்லியும் இதழ்விரித்து மகிழ்ச்சிக் கூத்தாடு
கின்றன. அலைவகளைச் சுற்றி, வாத்துகள் தத்தமது
பேடையருடன் சுற்றிச் சுற்றிவந்து, ஊடல் செய்தபடி
ஓடிப்பிடித்து விளையாடுகின்றன. காட்சி இன்பமே!
உன்னையன்றே நினைப்பூட்டுகிறது ! நீயின்றி எப்படி
இருப்பென் ? முல்லைக்கொடியாளே ! தெரிந்தெடுத்த
அருங்கனியே ! வா ! வா !!*

*சுவையே ! தேன் சொட்டும் இதழ்கள் தெவிட்டாத
மழலை ஒளிசிந்தும் கண்கள், தளிரொத்த கன்னம் கற்
கண்டே ! என்னல் மறக்கமுடியவில்லையே ! என்ன செய்
வேன் ? பால்வண்ண நிலவினிலே பணிப்பெண்ணாய்
மாறி, மதுக்குளித்த வண்டினைப்போல் நீராக்க
பெய்து, சின்ன விழிகாட்டி, சிட்டினைப்போல் இசை
மூட்டி, செந்தமிழ்த் தேன் பாய்ச்சி, சித்திரமே என்னி
தழில, முத்தமழை பெய்தனையே ! மோகக்கடலாட்டி
இட்டுவந்த செய்கையினை இதயமே ! இன்னும் மறக்க
வில்லை. எப்படி அன்பே மறக்கமுடியும ?*

*கண்ணே ! உன்னைப் பற்றிய எண்ணம் இரவிலும்
பகலிலும் தோன்றி என்னை மகிழ்ச்சிக் கடலிலே தள்ளு
கிறது; ஆனல் உனது பிரிவை எண்ணும்பொழுது நான்
இழைத்த தவறினை உணர்கிறேன். நடந்த தவறனை
திற்கும் நான்தான் காரணமென்பதை உள்ளபடியே
ஏற்றுக்கொள்ளுகிறேன். அன்பே ! உள்ளம் வேதனை
யால் விம்முகிறது. மன்னிப்பு வேண்டுமானுலும் கேட்டு
கொள்ளுகிறேன். இன்பமே ! அதையெல்லாம் மறந்து
விட்டுவா ! ஒளியே !! இனியும் எனைவாட்டாதே
தனிமைத்தனல் நோக்கி ஓட்டாதே ! வா ! வந்துவிடு
சோலைகளிலே காதலர் சொகுசாகத் திரிகின்றபோது
திரைப்படத்திலே தோகையர் ஆடும்பொழுதும், அ
துடன்பாடும்பொழுதும்இலக்கியத்தை உண்ணுக்தோறு
இதயமே ! உன்னையே காண்கிறேன். இளமை என்
மிருக்காது- இன்பத்தை வீணாக்கதே ! அன்பே வந்து
விடு !*

*வானம்கருத்திருக்கிறது. நட்சத்திரங்கள் ஒ
றிரண்டு, ஒளியை உமிழ்கின்றன. இடியிடித்துக்கொ
டிருக்கிறது, மின்னல்தோன்றித் தோன்றி மறைகிற
பளிச்சென்று இடைகாட்டும் மின்னல் தன்னில் ஒ
சுடராய் உருண்டாடும் உன் கண்களைக் காணுகிறே
பூங்கொடியே ! புதுமலரே !! வந்துவிடு !!*

*" திருமண வாழ்வு சிறப்புற வேண்டுமானல் மனை
குருடியாக வேண்டும்; கணவன் செவிடனுக வேண்
அடிக்கடி" என்று பேரறிஞன் மாண்டென் சொன்
அடிக்கடி உன்னிடத்தில் சொல்லி இருக்கிறேன்
செயலில் செய்துகாட்ட முடியவில்லையே !
வா ! உன் வரவு நோக்கி வழிமேல் விழியை
நிலையிலேயே இருப்பேன் ! வந்துவிடு
வந்துவிடு!*

ப. மு

ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி

அடுத்த விநாடியே தளநாயகனின் வாள் மணிமுடியின் மார்பில் பாய்ந்தது. மணிமுடி சுருண்டு விழுந்து பிணமானான். இளவரசனும் தளநாயகனும் மணிமுடியின் உடலை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

"இன்பவல்லி! நமது படையினர் மாற்றுடையில் வருவார்கள். எல்லோரும் இன்று இரவு இந்த மாளிகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். அவர்களுக்கு வேண்டிய எச்சரிக்கைகள், உத்தரவுகளைப் பிறப்பிக்க இளவரசர் இங்கேயே இருக்கட்டும். நான் வருகிறேன்" என்றான் தளநாயகன். பிறகு அங்கிருந்து வெளியேறினான்.

அன்று மாலை, இடைதுறை நகருக்குள் வந்து சேரும் எல்லாப் பாட்டைகளிலும் மக்களின் நடமாட்டம் அதிகமிருந்தது. பௌத்த துறவிகளும், வியாபாரிகளும், தொழிலாளர்களுமாக நகருக்குள் நுழைந்தனர். இரவு ஊரடங்கும் சமயம்: நாலைந்து பேர்களாக இன்பவல்லியின் மாளிகைக்குள் நுழைந்தனர். கொஞ்ச நேரத்தில் மாளிகை நிறைந்துவிட்டது. மீதியுள்ளவர்களை மடங்களிலும், சத்திரங்களிலும் தங்கி, உத்தரவை எதிர்பார்த்துத் தயாராக இருக்கும்படி கட்டளையிட்டான் இராசராசன். சத்திரங்களும், மடங்களும் நிறைந்துவிட்டன. இன்னும் பலருக்கு தங்க இடமில்லை. வீதிகளில் ஆங்காங்கே பதுங்கியிருக்கும்படி பலருக்குக் கட்டளையிட்டான். படைவீரர்களும் உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

10

"இப்படை தோற்கி னெப்படை செயிக்கும்?"

விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுபட் டனவே
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொருக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே.
சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்......

—புறநானூறு.

மரகதம் காணாமற் போன பிறகு. அரிசங்கமனும் வீரர்களும் அவளை எங்கும் தேடினர். ஆனால் பலனில்லை. இச்செய்தி இடைதுறையானுக்கும் வியப்பையளித்தது. நீண்டகாலமாக சோழ நாட்டிலிருந்து பல பெண்கள் திடீர் திடீரென மறைந்து வந்தனர். இதை இடைதுறையானும் அரிசங்கமனும் அறிவார்கள். சோழ நாட்டைக் கைப்பற்றியதே இரகசிய சதியால் தான். அவர்களையும் மிஞ்சும் விதத்தில் வேறொரு சதிக்குழு சோழ நாட்டில் வேலை செய்து வருகிறது என்பதை அறிவார்கள். அந்தக் குழுவினரையும் எப்படியாவது கண்டுபிடித்து அடக்காவிட்டால், இடைதுறை மன்னனின் ஆட்சி சோழ நாட்டில் நீடிக்காது என்பதை அறிந்தார்கள். அதனால் இடைதுறை நாட்டிலிருந்து இன்னும் பல ஒற்றர்களை வரவழைத்து வேவுப்படையை பலப்படுத்தினான் இடைதுறையான்.

அடுத்த சில நாட்களில், ஈழம் ...ன்ற நல்லடி அணியும், மரக்... படைகளும் கடலில் மூழ்கிக் ...மற் போனதாக செய்தி எட்... இதனால் இடைதுறையான ...கிழ்ச்சியுற்றான. எஞ்சிவரும் ...க் கைது செய்யும்படியும், ... படைகளைச் சின்னாபின்னப் படுத்தும்படியும் உத்தரவிட்டான். அவ்வாறே செய்து முடித்து விட்டதாகச் செய்தியும் கிடைத்தது.

அதன் பிறகுதான் ஒருநாள் இடைதுறை நாட்டிலிருந்து மணிமுடி அனுப்பிய செய்தி, இடைதுறையானுக்கு மகிழ்ச்சியையும், வியப்பையும் அளித்தது. "இடைதுறை நாட்டிலிருந்து தூக்கிச் செல்லப்பட்ட இன்பவல்லி வந்திருக்கிறாள். அடுத்த நாள் விபரம் தொடரும்" என்பது தான் அது. செய்தி கொண்டுவந்த தூதுவன் அங்கேயே நிறுத்திக்கொள்ளப் பட்டான். தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து வேறொரு தூதுவனிடம் செய்தி அனுப்பினான் இடைதுறையான்.

ஆனால் இடைதுறை நாட்டிலிருந்தும், சோழ நாட்டிலிருந்தும் சென்ற ஒற்றர்களனைவரும் தளநாயகனால் ஆலங்காட்டுப் பகுதியில் பிடிபட்டனர். அவர்களைக் கைது செய்து, காவலில் வைத்துவிட்டு, அதற்குப் பதிலாக தனது வீரர்களையே அனுப்பி வந்தான். அந்த வீரர்கள் மூலம் சோழ நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் அறிந்து கொண்டான் தளநாயகன்.

மறுநாள் மணிமுடியிடமிருந்து வந்த கடிதத்தில், அடுத்த நாள் அரண்மனையில் இன்பவல்லிக்கு விருந்து நடத்தப்போவதாகவும், அதில் மன்னரும் வந்து கலந்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் ஒரு காலத்தில் இடைதுறை மன்னரால் சிறையெடுக்கப்பட்ட கயல்விழி என்ற காரிகை. அன்னை என்ற பெயரால் இப்போது ஆயிரந்தீவை ஆட்சி செய்வதாகவும், அவள்தான் இன்பவல்லியையும் தூக்கிச்சென்று பவளத்தீவிலே சிறை வைத்திருந்ததாகவும், அங்கிருந்து இன்பவல்லி தப்பிவந்ததாகவும், விழாவில் இடைதுறை மன்னரும் கலந்து கொண்டால், இன்பவல்லியிடமிருந்து பல விபரங்களைத் தெரிந்து கொள்ளலாமென்றும், அதன் பிறகு மன்னர் ஆணையிட்டால் தானே படைதிரட்டிச் சென்று, ஆயிரந்தீவுகளையும் கைப்பற்றி, அன்னையைக் கைது செய்து வரத் தயார் என்றும் அறிவித்திருந்தான் மணிமுடி.

இக்கடிதத்தை அரிசங்கமனும் பார்த்தான். மரகதமும் இவர்களால்தான் தூக்கிச் செல்லப்பட்டிருப்பாளோ என்று சந்தேகித்தான்.

"அரசே! நமக்கு இதுதான் நல்ல நேரம். நமது முயற்சிகள் அனைத்தும் வெற்றிதேடித் தந்துள்ளன. சோழநாட்டைக் கைப்பற்றினோம். இடைதுறை நாட்டை மீட்டினோம். ஈழம் சென்ற படைகளும் சிதைந்தன. சோழமன்னர் கைது செய்யப்பட்டார். அவருடைய குமாரன் இராசராசன் கடலில் மூழ்கி இறந்ததாகவே எல்லோரும் கூறுகின்றனர். கடைசியில் எஞ்சியிருப்பது அன்னை ஒருத்திதான். அவள் தான் நமது முதல் எதிரி. அவள் இருக்குமிடம் நமக்கு இதுவரை தெரியாமலிருந்தது. அவளால் பலதடவைகள் நமது முயற்சிகள் தோல்வியுற்றன. ஆகையால் உடனடியாக அவளை வெற்றி கொள்ளவேண்டும். அதன்பிறகு, இந்தப் பரந்த உலகில் நமக்கு எதிரிகளே இல்லை. இன்பவல்லி நம்மிடம் திரும்பி வந்ததும், அன்னையிருக்குமிடம் தெரிந்ததும் நமது காரியம் வெற்றியடைய வழி வகுத்துள்ளன. இந்த நல்ல தருணத்தை நாம் நழுவ விட்டால், அன்னை சமாளித்துக் கொள்வாள். நமது காரியமும் தோற்றுவிடும். ஆகையால் நீங்கள் உடனே புறப்பட்டுச் செல்வதுதான் நல்லது" என்று அரிசங்கமன் ஆலோசனை கூறினான்.

இடைதுறையானும் யோசித்தான். அன்னையைப் பழிவாங்க இதுதான் தருணம் என்றும் முடிவு செய்தான். உடனே புறப்பட்டு வருவதாகவும் ஓலை அனுப்பினான் மணிமுடிக்கு. தான் திரும்பிவரும் வரை மிகவும் கவனத்துடன் இருக்கும்படி அரிசங்கமனுக்குத் தெரிவித்தான். பாதுகாப்புப் படைகளையும் பலப்படுத்தி, மிகவும் விழிப்புடன் இருக்கும்படி உத்தரவிட்டான். ஒருசில படைவீரர்களைமட்டும் தன்னுடன் துணைக்கு வரக் கட்டளையிட்டான். பிறகு இடைதுறை நாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானான்.

இடைதுறை மன்னன் புறப்பட்டு வருவதாக ஓலை கொண்டு வந்த தூதுவன் ஆலங்காட்டுப் பகுதியில் வந்து கொண்டிருந்தான். திடீரென ஒரு வீரன் மரத்திலிருந்து குதிரைமீது குதித்தான். தூதுவனைக் கீழே தள்ளினான். மறுவிநாடியே குதிரையை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, கீழே விழுந்த தூதுவனுடன் கட்டிப் புரண்டு சண்டை செய்தான். சிறிதுநேரத்தில் தூதுவன் குத்தப்பட்டு இறந்துபோனான். தூதுவனுடன் சண்டை செய்த வீரன் வேறு யாருமல்ல; தளநாயகன் தான். இறந்த வீரனை ஒரு புதருக்குள் தள்ளிவிட்டு, குதிரைமீதேறி இடைதுறை நாட்டிற்குச் சென்றான் தளநாயகன்.

அன்னையின் படைகளில் சிலர் இளமரக்காவிற்குப் பக்கத்திலும் பதுங்கியிருந்தனர். அவர்களையும் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லிவிட்டு நகருக்குள் புகுந்தான். மணிமுடியின் அரண்மனையை அடைந்தான். அங்கு காவற்தலைவனிடம் "இடைதுறை மன்னர் வருவார். அரண்மனையில் அவருக்கு விருந்து செய்ய ஏற்பாடு செய்யுங்கள். தளபதி மணிமுடி இன்பவல்லியுடன் வருவார்!" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

இடைதுறை மன்னன் வீரர்களுடன் இடைதுறை நாட்டிற்குள் நுழைந்தான். அவனைப் பின்பற்றி இளமரக்காவில் காத்து நின்ற அன்னையின் படையினர் பதுங்கிப் பதுங்கிச் சென்றனர். மன்னன் அரண்மனைக்குள் நுழைந்தபிறகு, கோட்டைக் காவலர்கள் தாக்கப்பட்டனர். விரைவில் அவர்கள் அன்னையின் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டனர். அரண்மனையையும், கோட்டையையும் சுற்றி வளைத்துக்கொண்டன அன்னையின் படைகள்.

இன்பவல்லியின் மாளிகையிலும், சத்திரங்கள், மடங்களிலும், தெரு மூலைகளிலும் பதுங்கியிருந்த எல்லாப் படையினரும் வந்து சேர்ந்தனர். தளநாயகனும், இராசராசனும் பொறுக்கி யெடுத்த சில வீரர்களுடன் உள்ளே நுழைந்தனர்.

இடை துறை மன்னன் அரண்மனைக்குள் நுழைந்ததும் சிறந்த வரவேற்பு நடைபெற்றது. "மணிமுடி எங்கே?" என்று கேட்டான் இடைதுறையான்.

"இன்பவல்லியுடன் இப்பொழுது வந்து விடுவார்" என்று காவற்தலைவன் பதிலளித்தான். விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. ஆனால் மணிமுடிவரவில்லை. உடனே சில வீரர்கள் இன்பவல்லியின் மாளிகைக்கு விரைந்தனர். அவர்கள் அரண்

மனை வாசலைத் தாண்டியதும் பல ஈட்டிகள் அவர்களுடைய மார்புகளைப் பிளந்தன. உடனே அரண்மனை வாசலில் கூக்குரல் கிளம்பியது.

அதே சமய்த்தில் தான் தளநாயகனும் வீரர்களும் அரண்மனைக்குள் நுழைந்தனர். இடைதுறை மன்னனுக்கும், அவனுடன் வந்த வீரர்களுக்கும் அப்போதுதான் சந்தேகம் ஏற்பட்டது. உடனே வாட்களை உருவினர். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கு முன்னரே ''அன்னை வாழ்க!'' என்ற கோஷம் வானைப் பிளந்தது. அன்னையின் படை வீரர்களும், தளநாயகனின் படை வீரர்களும் எதிரிகளைச் சாடினர். வாளுடன் வாள் உராய்ந்தன.

இதைச் சிறிதும் எதிர்பாராத இடைதுறையான் திகைத்து விட்டான். உடனே ஓடிப் பதுங்க ஆரம்பித்தான். ஆனால் அவன்மீதே குறி வைத்திருக்கும் தளநாயகன் விடவில்லை; ஓடிச் சென்று அவனை எதிர்த்தான், வேறு வழியின்றி இடைதுறையானும் அவனுடன் வாட் போர் புரிந்தான். இதற்கிடையே தன்னை யாரென்று காட்டிக் கொள்வதற்காக தன் மாறு வேஷத்தைக் கலைத்தான். இதைக் கண்டு இடைதுறையான் திடுக்கிட்டான்.

''நீயா ? தளநாயகனா ?''

''ஆம் !''

''நீ...நீ...கடலில் மூழ்கி இறக்கவில்லையா ?''

''உன் உயிரை உறிஞ்சவே பிழைத்து வந்தேன் !''

''மணி முடி எங்கே.?''

''அவன் இன்று காலையில் இதே வாளுக்கு இரையாகி விட்டான்.''

''என்னை விட்டுவிடு ! உன்னிடம் சரணடைகிறேன் !''

''ஒரு தடவை உன்னை மன்னித்ததால் கிடைத்த பலன் போதும் ! இந்தா ! இந்த வாள் வீச்சுக்குப் பதில் சொல் !''

வாளை ஓங்கி வீசினான் தளநாயகன். மறு விநாடியே இடைதுறையானின் வாள் தூரத்திலே போய் விழுந்தது. அடுத்த விநாடி தளநாயகனின் வாள் இடைதுறையான் கையில் பாய்ந்தது. ஆனால் இடைதுறையான் சளைக்கவில்லை. வாழ்வா, சாவா'' என்ற பிரச்சினையில் இறங்கிவிட்டான். தூரத்தில் கிடந்த வாளை இடது கையால் எடுத்துக் கொண்டான் இடைதுறையான். மீண்டும் இருவரும் பொருதினர். ஆனால் வாள் வீச்சில் வல்லவனான தளநாயகனிடம், இடது கையினால் போரிடும் இடைதுறையான் எம்மாத்திரம் ? சிறிது நேரத்தில் இடைதுறையான் கீழேவிழுந்தான். தளநாயகனின் வாள் அவன் நெஞ்சிலே பாய்ந்து, அவனுடைய உயிரைக் குடித்தது.

அதேசமயம் ''அன்னை வாழ்க!'' என்ற கோஷம் அரண்மனையில் எதிரொலித்தது. சப்தம் கேட்டு எஞ்சி நின்ற இரண்டொரு எதிரிகளும் பணிந்தனர். உடனே தளநாயகனும் இராசராசனும் அரண்மனையை வசப்படுத்திக் கொண்டனர்.

அமைதியைக் கிழித்துக்கொண்டு கூட்டத்தின் கோஷம் மீண்டும் எழுந்தது.

''அன்னை வாழ்க !...வாழ்க !''

''மன்னவர் வாழ்க !...வாழ்க!''

''சோழ மண்டலம் வாழ்க !... வாழ்க !''

படையினர் சிறிது நேரம் ''வாழ்க! வாழ்க!'' என்று கோஷித்துக் கொண்டேயிருந்தனர். தளநாயகனுக்கு அவர்களிடையே அமைதியை உண்டுபண்ண சிறிது நேரம் பிடித்தது. பிறகு நகர் முழுதும் உள்ள இடைதுறையானின் காவலர்களைக் கைது செய்யும்படி உத்தரவிட்டான் தளநாயகன். வீரர்களும் விரைந்து சென்று படை வீடுகளைக் கைப்பற்றி அங்குள்ள வீரர்களையும், நகரைக் காவல் செய்யும் வீரர்களையும் கைது செய்தனர். அந்த இடங்களில் சோழ வீரர்கள் நிறுத்தப்பட்டனர்.

அன்றிரவே வெற்றிச் செய்தியைத் தெரிவித்து, அன்னையிடமிருந்து மேலும் உத்தரவுகள்பெற, ஆயிரம் தீவுக்குப் புறப்பட்டனர் மங்கையும் சில வீரர்களும். இவ்வளவு நிகழ்ச்சிகளும் இரவோடு இரவாக நடந்து முடிந்தன.

பொழுது புலர்ந்தது- மக்கள் விழித்தெழுந்தனர். செய்தி சிறிது சிறிதாகப் பரவியது. மக்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டனர். வீதிகளில் அன்னையின் படை வீரர்களும் சோழ நாட்டுப் படை வீரர்களும் பவனி வந்து கொண்டிருந்தனர். ஆயினும் பலருக்குச் சந்தேகம் தீரவில்லை. ஆனால் சிறிது நேரத்தில் இளவரசன் இராசராசனின் ஆணையும், அறிவிப்பும் நகரெங்கும் பறை சாற்றப்பட்டது. அதன் பிறகுதான் மக்களும் உண்மையை உணர்ந்தனர்.

சோழ நாட்டை நோக்கிப்படைகள் புறப்பட ஏற்பாடு செய்தான் தளநாயகன். அதுவரை மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்த இளவரசனுக்கு இச் செய்தி கசந்தது. இந்நிலை அவனுக்குச் சங்கடத்தை யளித்தது. சோழ நாட்டிற்குப் புறப்படும்படி உத்தரவு கிடைத்ததும் இன்பவல்லி துள்ளிக் குதித்தாள். ஆடை அலங்காரங்கள் செய்து கொண்டிருந்தாள்.

இராசராசன் சோர்வுடன் அவளுடைய அறைக்குள் நுழைந்தான். அவளுடைய குதூகலத்தைக் கண்டதும் அவனுக்கு இன்னும் வேதனையாகத்தான் இருந்தது. இன்பவல்லி அவனைப் பார்த்தாள்.

''ஊருக்குப் புறப்படும் நேரத்தில்கூட முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே ?'' என்றாள் ஆவலாக.

''யார் போகிறார்கள் ஊருக்கு?''

''எல்லோரும்தான் ! ஏன், நாமிருவரும்கூடத்தான் ''

''யார் சொன்னது ?''

''தளபதியின் உத்தரவு !''

''அதெப்படி முடியும்?''

''உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை !''

''தளபதி செல்வார். நான் செல்வேன். படைகளும் புறப்படும் ! ஆனால் ஒருவர்மட்டும் அவ்வளவுசுலபமாகப் புறப்பட்டுவிட முடியுமா?''

''யார் அந்த ஒருவர் ?''

''நீதான் இன்பவல்லி !''

''ஆ ! நான் புறப்பட முடியாதா? ஏன் ?''

இன்பவல்லியின் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. இளவரசன் பேசாமல் நின்றான். எப்படி அவளிடம் விளக்குவது என்பதுதான் அவனுக்கும் பெரிய பிரச்சினையாக இருந்தது.

இடக்கரத்தில் வாளேந்தும் இடைதுறையான்.

''ஏன் பேசாமலிருக்கிறீர்கள் ? நான் உங்களுடன் வரக்கூடாதா ? அப்படியானால் என்னைவிட்டு நீங்கள் பிரிந்து செல்லத்தான் போகிறீர்களா ? சொல்லுங்கள்!'' என்றாள் கண்ணீர் வடித்துக்கொண்டே! இளவரசன் அவள் அருகில் சென்றான். அவள் தலையை கோதினான்.

''கண்ணே ! உன்மீது எனக்குள்ள காதல் வானத்தைவிட பரந்தது. கடலைவிடஆழமானது. இல்லையானால் அன்னையின் அன்புக் கட்டளையையும்மீறி உன்னைக் கோமளத் தீவிலிருந்து விடுதலை செய்வேனா? உன்மீது உயிரையே வைத்திருக்கிறேன். என்னை நம்பு !''

''அப்படியானால் என்னை ஏன் அழைத்துப் போக மறுக்கிறீர்கள்?''

''நாம் இருவரும் சாதாரணக்குடி மக்களாய்ப் பிறந்திருந்தால் இந்த இடையூறு நேர்ந்திருக்காது. நானோ சோழ நாட்டின் இளவரசன். நாளை ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியவன். நீயோ அந்த நாட்டிற்கு எதிரி என்று பிரகடனப்படுத்தப் பட்டவள். ஆகையால் திடீரென நாமிருவரும் சேர்ந்து சென்றால் உனக்கு ஆபத்து. அத்துடன் நம் காதலுக்கும் இடையூறு. மன்னரும் அரசவைக் குழுவும் நம் காதலை ஏற்காவிட்டால்...''

''ஏற்காவிட்டால் என்ன ? எங்கேயாவது கோமளத் தீவு போன்ற ஒரு தீவுக்குச் சென்று, மனித சஞ்சாரமற்ற இடத்தில், நிம்மதியாக வாழ்வோம், வாருங்கள் !''

''பொறுப்பற்ற பேச்சு. நீ என் மீது வைத்திருக்கும் காதல் உண்மையானால், நான சொல்கிறபடி நீ நடக்க வேண்டும். முதலில். தளபதியுடன் நான் சென்று சோழ நாட்டை மீட்க வேண்டும். அங்கே சிறை வைக்கப்பட்டிருக்கும் என் பெற்றோரையும், சகோதரர்களையும் மீட்கவேண்டும். அவர்களிடம் சோழ நாட்டின் மீட்சிக்காக நீ செய்த தியாகத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதன்பிறகுதான் நமது திருமணத்திற்கு அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டும். அதுவரை பொறுத்திரு.''

'' அதற்குப் பதில் என்னைக் கொன்று விட்டுப் போங்கள் ! உங்களைப் பிரிந்து, தனித்து வாழ்வதை விட சாவதே மேல் !''

''என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா ?'!

''நம்பிக்கை இல்லை என்று எப்போது சொன்னேன் ? ஆனால் அதே நம்பிக்கையை உங்கள் பெற்றோரிடமும் எப்படி எதிர்பார்க்கமுடியும் ? சிம்மாசனம் ஏறப்போகும் உங்களுக்கு ஆயிரம் பெண்கள் காத்திருப்பார்கள். பிறகு என்னையா திரும்பிப் பார்க்கப் போகிறீர்கள் ?'!

''அவநம்பிக்கை வேண்டாம் இன்பவல்லி !''

அந்த நேரத்தில் தளநாயகன் அங்கே வந்தான். ''இளவரசே ! புறப்படவில்லையா ? படைகள் காத்திருக்கின்றனவே! ஏன்இனபவல்லி கண்ணீர் விடுகிறாய் ? இளவரசர் ஏதாவது சொன்னாரா ?'' என்று கேட்டான் தளநாயகன்.

''என்னைக்கொல்லாமல்கொல்லுகிறார்'' என்றாள் இன்பவல்லி இளவரசனை ஓரக் கண்களால் பார்த்துக் கொண்டே

''காரணம் என்ன?'' என்று கேட்டான் தளநாயகன்.

''என்னை இங்கேயே இருக்கச் சொல்கிறார். நானும் உங்களுடன் வருவதாகச் சொன்னேன். மறுக்கிறார் இளவரசர்!'' என்றாள் இன்பவல்லி.

''இளவரசர் கூறியதில் நியாயம் இருக்கிறது. நீங்கள் இங்கேயே இருங்கள். இளவரசே ! என்னுடன் வாருங்கள்!'' என்றான் தளநாயகன். மறுவினாடியே இளவரசனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, இன்பவல்லியைத் தி... பிப் பார்க்காமல் வெளியே ... றான் தளநாயகன். இள... இன்பவல்லியை திரும்பித்... பிப் பார்த்துக்கொண்டே செ...

இன்பவல்லி அவர்கள் ... திக்கையே பார்த்துக் ... திகைத்து உட்கார்ந்தி...

சந்திர கிரகணம்

சந்திரன், பூமி, சூரியன் ஆகிய மூன்றும் முறையே ஒரு நேர்கோட்டில் வரும்போது பூமியின் நிழல் சந்திரன்மீது விழுவதால் சந்திரகிரகணம் உண்டாகிறது. இது விஞ்ஞான விளக்கம். இவ்விளக்கத்தை தெரிந்தவர்கள் சிலரும், தெரியாதவர்கள் பலரும் சந்திரகிரணத்தை புண்ணியநாளாகக் கருதுகிறார்கள். சந்திரகிரகண பலன் கிட்டும் என இருசாராரும் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை அறிவுக்கு பொருந்தாது என்பதற்கு சரித்திரத்திலிருந்து ஒரு சான்று தருகிறோம்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்க நாடான ஏதென்ஸ் (Athens) மாநகரை; சிசிலித்தீவிலுள்ள (Sicily) சீஜஸ்டா (Segesta) என்ற நகர் உதவிக்கழைத்தது. ஏதென்ஸ் தனது படையை அனுப்பிவைத்தது. ஆனால், வெற்றிபெற முடியாத அளவுக்கு சிசிலியில் கிரேக்க படைகள் இருக்கவேண்டியதாயிற்று. எதிரிகளை வெல்ல முடியாமலிருந்தனர். அத்தருணத்தில் கிரேக்க படையின் தளபதியாக நிக்கேயஸ் (Nicias) என்பான் இருந்தான். படைகளை வைத்து எதிரிகளை வெல்லமுடியாது என்று அறிந்ததும் பின்வாங்கிச் செல்ல திட்டமிட்டான். கிரேக்கர்கள் சம்மதித்தனர். மிகவும் நெருக்கடியான கட்டம். கிரேக்கப்படை திடீர் தாக்குதலுக்குள்ளாகலாம் என்ற கட்டம் உருவாகிவிட்டது. நிக்கேயஸ் தன் படைகளுடன் திரும்பிச்செல்ல முடிவுகட்டியவன்; தயங்கினான். திரும்பிச் செல்லும் நோக்கத்தை ஒத்தி போட்டுவிட்டான். "நாள் சரியில்லை! பொறுத்தே திரும்பவேண்டும்" என்று தீர்மானித்தான். நாள் சரியில்லாமல் போனதற்கு காரணம்? அன்று சந்திரகிரணம்! ஆம்! கிரேக்கப்படை தற்பாதுகாப்புக்காக திரும்ப முடிவுகட்டிய நேரத்தில் சந்திரகிரகணம். இது ஒரு பெரிய சகுனத் தடையாக கருதப்பட்டது. எனவே பிரயாணம் ஒத்தி போடப்பட்டது.

ஆனால், எதிரிகள் என்ன ஏமாளிகளா? அவர்கள் கிரேக்கப் படையின் பலவீனத்தை அறிந்துகொண்டனர். "தக்க தருணம் இதுவே!" என கிரேக்கப்படையைச் சூழ்ந்துகொண்டனர். போர்! இரு சாராரும் கை கலந்தனர். முடிவு? நிக்கேயஸ் உட்பட கிரேக்கப்படையினர் இரத்தவெள்ளத்தில் மிதந்தனர். சந்திரகிரகண பலனை நம்பியவர்கள் இரத்தவெள்ளத்தில் மிதந்தனர். சந்திரகிரகண அபசகுனத்தை மதியாது சென்றால் ஆபத்து வரும் என நம்பினர். செல்லாமல் தங்கினர்; சகுனத்தை மதித்தவர்களுக்கு சாதகமாகவல்லவா முடிந்திருக்கவேண்டும். ஆனால், அப்படியா முடிந்தது! சந்திரகிரகணத்தை புராணக் கண்கொண்டு பார்த்து நடந்தவர்கள் நாசமாக்கப்பட்டனர்; மாவீரர் பாசறை மடமைக்குப் பலியானது.

—ச. செல்லப்பாண்டியன்

குறள் மாநாடு

1955-மே 14, 15 தேதிகளில்பெங்களூர் டாஸ்கர் டவுன் (பிளாக் பள்ளி மைதானத்தில்) உயர்நிலைப் பள்ளித் திடலில் மாபெரும் பந்தலில் நடைபெறும்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேராசிரியர் சி. இலக்குவனார், புலவர் குழந்தை, பேராசிரியர் தி. வை. சொக்கப்பா, வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம், திருக்குறளார் வி. முனுசாமி, கண்ணதாசன, பேராசிரியர் க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், குன்றக்குடி அடிகள், கி. வா. ஜகநாதன், கா. அப்பாதுரையார், ம. பொ. சிவஞானம், ராஜசேவந்சக்தா மாஸ்தி வெங்கடேசர், கன்னட பேராசிரியர் எல். குண்டப்பா, பண்டிதரத்ன ஆஸ்தான கன்னட வித்வான் சிவமூர்த்தியார் முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் குழுவினரின் "வள்ளுவர் - காரதி" வில் லுப்பாட்டு நிகழ்ச்சியும் வேறு நாடக, இசை நிகழ்ச்சிகளும் திருக்குறள் கண்காட்சியும் உண்டு.

திருக்குறள் கண்காட்சிக் கட்டணம் 0-1-0.

இருநாட்களுக்கும் மாநாட்டுக் கட்டணம்: புரவலர் ரூ. 25, பிரதிநிதிகள் ரூ 2, வரவேற்பாளர் ரூ. 5, பார்வையாளர் ஆண்கள் ரூ. 1, பெண்கள் ரூ. 0-8-0.

மே நாள்! மேலான நாள்!

திராவிடப் பாட்டாளி மக்களின் பெரும்படை - தினம்--தினம் விழிநீர் வடித்து, வியர்வையில் குளிக்கும் எளிய வர்க்கத்தினரின் அணிவகுப்பு மே முதல் நாளன்று சென்னையில் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். ராசேந்திரன் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியின்கீழ் அணிவகுத்து வந்த அந்த ஊர்வலம் கான்ரான்ஸ்மித் நகரில் தொடங்கி திருவல்லிக்கேணி கடற்கரை வந்து சேர்ந்தது. ஊர்வலத்தின் மாண்பைக் கண்டோரும், கேட்டோரும் புதுவாழ்வைத் தொடங்கி வைக்கப் போகும் புரட்சி இயக்கத்தை வாழ்த்தாமலில்லை. பாராட்டாதவர்கள் கிடையாது.

சென்னை--42வது வட்ட தி. மு. கழகத்தினரின் முயற்சியினால் சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர் திருவல்லிக்கேணி கடற்கரையில் மே நாளைக் கொண்டாடிச் சிறப்பித்து தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளித்தனர். பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு கிளைக்கழகங்கள், படிப்பகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. கூட்டத்திற்கு தோழர் இளம்பரிதி தலைமை தாங்கினார்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கையில் கழகத்தின் இலட்சியம் குறித்து சிறப்பானதோர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதில் சில :--

"நமது வளர்ச்சி அதிகமாகியுள்ளதா? குறைந்து போயுள்ளதா? நமது கருத்துக்களை மக்கள் மன்றம் ஏற்றுக்கொண்டதா, இல்லையா?--அந்தக் கணக்கைத்தான் நாம் பார்கவேண்டும்; எனவே மாற்றார்களின், இழித்துக்கூறுதல், இல்லாது பொல்லாது புனைந்து கூறுதல் ஆகியவற்றை யெல்லாம் 'குப்பை'களென ஒதுக்கித் தள்ளுங்கள்; 'குப்பைகள்' என்று ஒதுக்கும் அவைகளை தூர எறிந்துவிடாதீர்கள்; எங்காவது ஓர் இடத்தில் அவைகளைப் போட்டு வையுங்கள்; வளரும் திராவிட முன்னேற்றக் கழகப் பயிருக்கு அந்தக் குப்பைகள் எருவாக இருகட்டும்!" என்றார். மேலும் தொழிலாளர் பற்றிப் பேசுகையில், "தொழிலாளர்கள், தங்களது உழைப்பின் மேன்மையை உணருமாறு செய்யப்பட வேண்டும். 'இந்த நாடு, தொழிலை மதிக்காத நாடு,' என்ற அடிப்படைக் கருத்து மாறவேண்டும்; தொழிலாளர் மனதிலே எண்ணத் தெளிவு ஏற்பட வேண்டும்; உழைப்பாளர்களுக்கு வேலை தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்."

"ஆனால் நமது நாட்டில் உள்ள அரசாங்கமோ, 'ஆண்டையும் இருக்கட்டும்--அடிமையும் இருக்கட்டும்--சோஷலிசமும் இருக்கட்டும்,' என்
கிறது; 'பஞ்சையும் இருக்கட்டும்
முதலாளியும் இருக்கட்டும்--மா
சோஷலிசமும் இருக்கட்டும்', எ
கிறது; இந்த நிலை மாறி, தொ
லாளர் வாழ்வு பெற வேண்டுமெ
ன்றால், திராவிட நாடு பிரிவினை தா
அதைச் சாதிக்க முடியும்" என்று

★

சேலம் செவ்வாய்ப்பேட்டை
மு. கழகக் கிளையின் சார்பில்,
டோரியா மார்க்கெட் மைதானத்
1-5-55 மாலை 6-30 மணிக்கு
பெரும் மே தின விழா பொ
கூட்டம் நடைபெற்றது.

நகரசபை உறுப்பினர
தோழர் வரதராசுலு அவர்
தலைமை தாங்கினார்.

தோழர் ப. கண்ணன் சி
நேரம் பேசியதும், நகரச் செ
ளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்
சேலம் அம்மாப்பேட்டை காந்தி
சிலையருகில் கட்டப்பட்டிருந்த தி
கழகக் கொடியை இரண்டு தி
களுக்கு முன்பு போலீசார் பல
மாக அபபுறப்படுத்திய ஜன
விரோத நடவடிக்கையைக்
டித்துத் தீர்மானம் ஒன்று கொ
வந்தார்.

அதனை தோழர் ஈ. எ.
அரங்கநாதன் வழிமொழிந்த
கூடியிருந்த பல்லாயிரக்
கான மக்களும் தங்கள் கை
மூலம், காங்கிரசாரின் எதே
காரப் போக்கிற்கு தங்கள்
னத்தைத் தெரிவித்தனர்.

அடுத்துத் தோழர் சிற
சுப்பிரமணியம் சிறிது நேரம்
யதும், தோழர் முகவை ஆர்
பாண்டியன் மே தின வ
குறித்தும், மே தினக் கொ
டத்தில் தி. மு. கழகம்
பங்கு குறித்தும் உரை
தினார்.

இறுதியாக தோழர் கே.
யழகன் அவர்கள், நாட்டு நி
யும், கழகத்தின் இலட்சிய வ
குறித்தும் விளக்கி நீண்
உரை நிகழ்த்தினார்.

பின் கிளைக் கழகச் செ
தோழர் பி. பி. பத்மநாபன்
நவில விழா இனிது முடிவு

அத்தான்
அழகிரி நாடக மன்ற
அளிக்கும்
புதிய நாடகம்
?

சிலம்பு வழங்கும் செல்வம்

பன்மொழிப்புலவர்

கா.அப்பாதுரை.M.A.L.T

சிலப்பதிகாரமும் ஆராய்ச்சியுலகும்

சிலப்பதிகாரத்தின் பெருமைகள் சிறப்புக்கள் மிகப்பல. அவை பொதுமக்கள் உள்ளத்தையும் இளைஞர், அறிஞர் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்துவிட்டன. எதிர்ப்பு அணி வகுக்கக் கனவு கண்டு ஆதரவில்லாமல் உளையும் அறிஞர் கூட இவற்றை மனமார ஒப்புக்கொண்டு, புகழ்பாடத் தயங்கவில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தின் எல்லாப் பெருமைகளிலும் எவரும்--எதிர்ப்பாளர் மட்டுமல்ல, ஆதரவாளர் கூட--கவனம் செலுத்த வில்லை. **இத்தொடர் கட்டுரைத் தொகுதியின் நோக்கம் ஆதரவாளர் ஆதரவைப் பெருக்குவதோ, எதிர்ப்பாளரை எதிர்ப்பதோ அல்ல. இரு சாராரிடையேயும் புத்துணர்வையும் புத்தார்வத்தையும் எழுப்புவதே ஆகும்.**

சிலப்பதிகாரத்தின் முழுச் சிறப்பையும்--ஆதரவாளர்--எதிர்ப்பாளர் கருத்தைக் கவர்ந்த பகுதிகளையும், அவர்கள் கவனிக்காது விட்ட பகுதிகளையும்--நாம் ஒருங்கே கவனிக்க வேண்டும்.

சிலப்பதிகார ஆராய்ச்சியாளர்--ஆதரவாளர் எதிர்ப்பாளர் உட்பட--கருத்துச் செலுத்திய கடாக்கள் அல்லது பிரச்சினைகள் இரண்டுதான்.

(1) சிலப்பதிகாரத்தின் காலம் எது? அது சங்க இலக்கிய காலத்ததா, அதற்குப் பிற்பட்டதா?

(2) சிலப்பதிகாரம் தமிழ்ப் பண்புடைய நூலா, ஆரியப் பண்புடைய நூலா? இரண்டும் கலந்ததானல், தமிழ்ப்பண்பு மிகுதியா? ஆரியப் பண்பு மிகுதியா?

இந்த இரண்டிலும் தலையிடாமலே சிலப்பதிகாரத்தின் கலைநயத்தில் ஈடுபட்டு நுகர்ந்தவர்கள், அதை எடுத்து கலை உலகிலே கையாள்பவர்கள் உண்டு. அவர்கள் சிலப்பதிகாரத்தில் கிழ்வரும் பகுதிகளில் கருத்துச் செலுத்தி ஆராய்ச்சித் துறையில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட தமிழ்ப் பண்புப் பகுதியை விளக்கியுள்ளனர்.

1. கற்புக் கடவுள் வணக்கம், தமிழர் கற்புநெறி ஆகியவற்றைச் சிலப்பதிகாரம் எவ்வாறு விளக்குகிறது? கண்ணகியின் மறகற்புச் சிறந்ததா, பாண்டியன் கோப்பெருந்தேவியின் அறகற்புச் சிறந்ததா?

2. சிலப்பதிகாரம் காட்டும் தமிழகத்தின் அந்தநாளைய சமயநிலை, திருமணம் முதலிய வாழ்க்கைப் பழக்க வழக்க நிலைகள், வாணிகத் தொழில் நிலைகள் ஆகியவை எந்த அளவில் சங்க இலக்கியங்கள் தரும் காட்சியோடு ஒப்புமை உடையவை? எந்த அளவு வேறுபட்டவை, மிகைபட்டவை அல்லது மாறுபட்டவை?

இவையன்றி மூன்றுவதாக பெரும்பாலான ஆராய்ச்சியாளர் கவனிக்காத ஒரு துறை உண்டு. அதுவே முன்னைய இருசாராரையும் தாண்டிய ஆக்கத்துறை. சிலம்பதிகாரத்தின் நாடகப் பண்பு, இசைப் பண்பு ஆகியவையே அது. இத்துறைகளில் உழைத்தவர் அறிஞருள் அறிஞரும், கலைஞருள் கலை-
ஞருமான ஈழம் தந்த செல்வர் அரு-
திரு விபுலானந்த அடிகளே ஆவ-
அவர்கள் 'மதங்க சூளாமணி'
என்ற, நூலால் நாடகப் பண்-
யும், 'பண்பு நூ'லால் இசைப் ப-
பையும் தனிப்பட ஆராய முற்-
டுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் முழுச் சிற-
பென்று நாம் கூறுவது முன்னை-
இரண்டு சார்புகளுடன் மூன்றுவ-
சார்பான நாடக இசைப் பண்புக-
யும் இணைக்கும் முத்தமிழ்ப்பண்-
ஆகும். சிலப்பதிகாரத்தை எ-
லாரும் **'முத்தமிழ்க் காப்பிய-**
'நாடகக் காப்பியம்', 'உரையி-
இட்ட பாட்டுடைச் செய்யுள்' எ-
முன் நாள் மரபின் வழி வந்-
தொடர்களால் வழங்குகின்றன-
ஆனல் அவற்றை அழகுத் தொ-
டர்களாகக் கொள்கின்றனரே-
அன்றி, மறைந்த அறிவுப்பண்பி-
சின்னங்கள் என்றோ நேரி-
யான பொருளுடையவை என்றே-
அத்தெய்வங்களைக் கருதி அவற்றி-
மிகுதி கவனம் செலுத்தவில்லை-
அருள்திரு விபுலானந்த அடிக-
மறைந்த தமிழிசை, தமிழ் நா-
கங்களைச் சிலப்பதிகாரத்தின் உத-
யாலும் அடியார்க்கு நல்லார் உ-
யின் உதவியாலும் மீண்டும் உயிர்-
பித்து எழுப்பும் அரும்பெரும் ப-
யைச் செய்துள்ளனர். ஆனா-
சிலப்பதிகாரமே உண்மையில் மு-
தமிழ்க் காப்பியம், நாடகம் எ-
னும் உண்மை இன்னும் விள-
கப்படவில்லை. அம்முறையில் சில-
பதிகாரத்தை ஆராய முற்பட்டா-
சிலப்பதிகார ஆதரவாராய்ச்சியு-
எதிர்ப்பாராய்ச்சியும் ஒரே புத்-
ராய்ச்சியில் இணைந்துவிட வழி எ-
படும். அதில் நாம் கருத்-
செலுத்தவேண்டும்.

(தொடரும்)

பஜனைப்பாடல்...

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

யிலே மூழ்கிக்கிடக்கும் மக்களை சிந்திக்க வைப்பது 'பணம்' தானு? சிந்தனைதானே புதுவாழ்வின் கரு! எண்ணம்தானே புரட்சிக்கு வித்து!

சீனு! அங்கே வளம்கொழிப்பதாகபொதுவுடமைநண்பர்கள் பெருமைப்படுகிருர்கள்! அதற்கு என்ன காரணம் என்பதை 'மாஸ்கோ நண்பர்கள்' சொல்லவில்லை. சீனுவின் புதுவாழ்வுக்கு மாசேதுங் தானு மூலகாரணம்? இல்லையே! பெண்களின் கார்கூந்தலை வெட்டி அந்த ஆரணங்குகளின் அழகைப் பங்கப்படுத்திய சமுதாயக் கட்டுப்பாட்டை நொறுக்கித் தள்ளிய பேரறிஞன் யார்? இன்றைய மாசேதுங்கா? பள்ளிப்பருவத்திலேயே இளம்பெண்களின் பஞ்சுப் பாதங்களை இறுககக்கட்டி அன்ன நடை பயின்ற அந்தச் சிட்டுகளின் தழுக்கை அழித்துவந்த சீனநாட்டு சமுதாயக் கொடுமையைப் படுசூரணமாக்கியது யார்? மாசேதுங்கா? உழவுக்கும் தொழிலுக்கும் உழைப்பவர்களை, ராஜகட்டளை என்ன செய்துவிடும்? என்று எதிர்த்துக்கேட்டது மாசேதுங்காலமா? இல்லை, சிந்தனைச் சிற்பி சன்யாட்சன் சீனத்துச் சீமையைப் பண்படுத்திச் சென்றுன். ரம்பாய்ந்த அந்த மண்ணில் மாசேதுங்கால் கதிர் காணமுடிகிறது.

நமது நாடு அப்படிப்பட்டதல்லவே! இன்றையத தென்னகம் ரஷ்யாவின் அந்தக் காலம்! இன்றையத் திராவிடம் சீனுவின் அந்தக் காலம்! எப்படி ரஷ்யாவுக்கு டால்டாய்சும், செகாவும் தேவைப்பட்டதோ, எவ்வாறு சீனத்திற்கு சன்பாட்சன் தேவைப்பட்டோரோ அதுபோல இங்கும் அத்தகு சீர்திருத்த வாதிகள்தான் முதலில் தேவைப்படுகிருர்கள். திராவிடம் இப்போது தரிசு நிலம்! எண்ணற்ற சமுதாயச் சடங்குகள் அந்த நிலத்தை விளை நிலமாக்க வெட்டாமல் புதராக்கியிருக்கின்றன. அந்தப் புதர் முதலில் அழிக்கப்படவேண்டும்! இந்தக் கருத்தை பொதுவுடமை பிரபுக்களுக்கு அறிஞர் அண்ணு அவர்கள் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிருர்கள்.

அதே நேரத்தில், எங்களது பொருளாதாரத் திட்டத்தையும் சொல்லாமலில்லை. தொழிலாளர் வர்க்கத்திற்கென நாங்களிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் அவர்களின் பொருளாதாரத் திட்டத்தைக் காட்டிலும். வெளிப்படையாகப் பறைசாற்றி பெருமை அடித்துக்கொள்ளாத எங்களது பொருளாதாரத் திட்டம்தான் பாட்டாளிவர்க்கத்தினருக்கும் நாடாளும் அரசினருக்கும் சாதகம் பயக்கவல்லது என்பதை என்னுல் மெய்ப்பிக்க முடியும்.

ஆலைகளின்மூலம் வரும் லாபத்தில் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டு, மற்றொரு பகுதியை மூலதனத்திற்கேற்ப முதலாளிகள் எடுத்துக் கொள்ளட்டும் என்கிருர்கள். நாங்கள் சொல்லுவது அப்படியல்ல. முதலில் தொழில் நிலையங்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டும்; லாபத்தில் தொழிலாளர் பங்குபோக மிகுதியை சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டும்; ஆனல் அந்த சர்க்கார் சுதந்திர சர்க்காராக இருக்கவேண்டுமென்கிறோம். உனது சிந்தனைக்கேற்ப இந்த இரண்டு திட்டங்களையும் அலசிப் பார்.

மூலதனம் போட்ட முதலாளிகள் அவர்களின் தொகைக்கேற்ப லாபத்தில் பங்கேற்றுக்கொண்டால் எப்படியோ ஒரு கருங்காலி வளருகிருன் என்று தான் பொருள்! தொழிலாளர்களுக்கு பிரித்துக் கொடுக்காதிருந்தால் பத்தாயிரம் ரூபாய் லாபமடைகிறவன், கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சித் (!) திட்டத்தால் லாபத்தில் பங்கு கொடுக்க நேர்ந்துவிட்டால் ஐயாயிரம் ரூபாய் அவன் பெற ஏதுவாகிறது. ஒரே ஆண்டில் சீமானகப் போகிறவன் இரண்டாண்டில் சீமானுவான். அவ்வளவு தான். கம்யூனிஸ்டுக் கட்சியின் திட்டத்தின் விளைவு இ-
வளவுதான். ஆனல் நாங்க-
கூறுவது அப்படியல்ல! தொழி-
நிலையங்களே சர்க்கார் வயமா-
வேண்டுமென்கிறோம்: அதன்ப-
சர்க்காருக்கு பணம் சேர்ந்தா-
நாட்டுக்குத்தானே நலம். அந்-
சர்க்கார் நம் சர்க்காராக இருக்-
வேண்டுமென்பது தான் எங்கள்-
முதல் நோக்கம். தொழிலாள-
களும் பயன்பெறமுடியும்; சர்க்கா-
ரும் வளமுடன் கோலோச்ச வழி-
பிறக்கும்; ஆகவே தான் சென்னை-
சர்க்காரை முதலிலே பிரிக்கவேண்-
டும் என்கிறோம். அதற்கா-
ஆதாரம் தான் சரித்திரம் காட்டும்
'திராவிடம்' என்பதாகும். 'திரா-
விடம் என்ற கோஷம் மூன்றுகோடி
தமிழர்களின் அல்லது பத்துக்கோடி
தென்னிந்தியர்களின் நடைமுறை
வாழ்வில் உருவாகியதல்ல; எனவே
'திராவிடநாடு' கோஷத்தை கம்யூ-
னிஸ்ட் கட்சி ஏற்கவில்லை'' என்று
ஜீவானந்தம் அடிக்கடி சொல்லு-
கிருர். இது உலர்ந்துபோன வாதம்.
உலகம் உருண்டை என்று
பித்த ...நுண்மையை மக்-
தில் நம்பிவிடவில்லை.
சிந்திய ரத்தம்தான்
பிராணி'களின் உள்-
எழுந்த எண்ணங்களை
திராவிடமும் அப்படி-

அவன் ஒரு கோடீஸ்வரன். உலக மறிந்த மனிதன் அவனைப்போன்ற ஒரு பணக்காரனை ஐரோப்பா இது வரை அறிந்ததில்லை. அவன் இறக்கும்போது நிலத்தின் பேரால் ஐந்து கோடி டாலரும் ரொக்கமாக வும், முத்து, வைரம், நகைகளாக வும் எட்டு கோடி டாலரும் இருந்த தாம். மாத வருமானம் பத்து லட்சம் டாலர், அதாவது ஒரு செகண்டுக்கு 24 டாலர் வருமானம் உள்ளவன்.

அவன்தான் நிக்கோலஸ் 2 என்னும் ரஷ்யாவின் கடைசி ஜார் மன்னன். உலகத்தின் ஆறிலொரு பங்கை சுமார் கால் நூற்றாண்டு காலம் ஆண்டுவந்தவன்.

மூன்றாண்டுகள் நாட்டிலே நடந்த கடும் போருக்கும் படுகொலை களுக்கும்பிறகு, தொடர்ந்துசண்டை செய்ய மறுத்துவிட்டது ஜாரின் படை. அதனால் 1917 மார்ச்சு 14-ந் தேதி படைத்தலைவர்கள் ஒன்று கூடி ஜார் மன்னனைப் பேட்டி கண் டனர். பதவியைத் துறந்துவிடும் படி மன்னனுக்கு ஆலோசனை கூறினர்.

இதைக் கேட்டதும் ஜார் திடுக் கிட்டான். இருதயம் நின்றுவிட்டது போலிருந்தது. முகம் வெளுத்தது. பயம் சூழ்ந்துகொண்டது. மூர்ச்சித் துக் கீழே விழுந்தான். அவனைக் கொண்டுபோய் படுக்கையில் கிடத் தினர்.

அவனால் தூங்கமுடியவில்லை. எழுந்து உட்கார்ந்தான். ஷேக்ஸ் பியரின் நாடகமான 'ஜூலியஸ் சீசரை'ப் படித்து இரவைப் போக் கினான்.

மறுநாட் காலை சரியாக 11-15 மணிக்கு பட்டத்தை துறந்ததாக ஒரு சாதாரணப் பென்சிலால் கை யெழுத்திட்டான். "நல்லவேளை இனி என் விருப்பம்போல் செய்ய லாம். கிரிமியாவிலுள்ள என் சொந்த மாளிகைக்குச் சென்று நிம்மதியாகக் காலம் கழிப்பேன்" என்றான்.

ஜார் மன்னனும் அவனுடைய குடும்பத்தினரும் தங்களுடைய கடைசி நாட்களை யூரல்மலை அடி வாரத்திலுள்ள ஒரு நகரத்தில், இரண்டே அறைகள் உள்ள ஒரு பழைய வீட்டில் வசித்துவந்தனர். புரட்சிக்காரர்களால் ஜார் மன்ன னும் அவனுடைய குடும்பமும் அங்கே சிறை வைக்கப்பட்டிருந் தனர். ஏழை விவசாயி உண்ணும் உணவே அவர்களுக்கும் கொடுக்கப் பட்டது. காபி, சர்க்கரை, வெண்ணை போன்றவைகள் கொடுக்கப்பட வில்லை. ஒருநாளைக்கு இருமுறை ...ி 'சூப்'பும், கோதுமை ...் கொடுக்கப்பட்டன.

... கண்ணாடிஜன்னல்களில் ...சப்பட்டது. அதனால் ... வீட்டிற்குள்ளிருந்து ... நடப்பதைப் பார்க்க ... தடுக்கப்பட்டார்கள். ...றந்து பார்க்கவும் ... ஜார் மன்னனின் ...டேனியா ஜன் னலைத் திறந்ததற்காகச் சுடப்பட் டாள். வீட்டோடு சேர்ந்துள்ள தோட்டத்தில் ஒருநாளைக்கு ஐந்து நிமிஷம் மட்டும் உலாவுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களைச் சுற்றியிருக்கும் காவலர்கள் அடிக்கடி அவர்களைக் கேலி செய்து பாடுவார்கள்.

ஒருநாள் ஒரு காவலன் ராணியிட மிருந்த 'பாக்கெட்' புத்தகத்தை யும் பணத்தையும் பறித்துக்கொண் டான். "இனி உங்களுக்குப் பணமே தேவையில்லை" என்று சொல்லி விட்டான்.

1918 ம் ஆண்டு ஜூலை 16-ந்தேதி நள்ளிரவு காவற்தலைவன் ஜார் மன்னனை தூக்கத்திலிருந்து எழுப் பினான். "நகரத்தில் புரட்சி ஏற் பட்டிருக்கிறது. விரைவில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் பாது காப்பு அறையில் போய் காத்திருங் கள் உங்களைப் பத்திரமாய் வேறு இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க வாகனங்களைஅனுப்பிவைக்கிறோம்" என்றான்.

ஆனால் ராணி இருட்டறையிலே நிற்கப் பயந்தாள். உடல் நடுங்கியது அவளுக்கு. ஒரு நாற்காலி கொண்டு வந்து போட்டார்கள். தன்னுடைய மகனை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள்.

திடீரென கூச்சல் கேட்டது. புரட் சிக்காரர்கள் ஜார்மன்னனைத்தேடி இருட்டறைக்குள்ளும் புகுந்துவிட் டார்கள். "உங்கள் நண்பர்கள் உங்களைக் காப்பாற்றிவிட முயலு கிறார்கள். ஆனால் நாங்கள் உங்களைச் சுடப்போகிறோம்" என்றனர்.

மறுவினாடியே ஜார்மன்னன்சுடப் பட்டான். பிறகு பெண்களையும் சுட்டார்கள். அந்தப் பெண்கள் இங்கு மங்கும்கூச்சலிட்டுக்கொண்டே ஓடினார்கள். ஆனால் புரட்சிக்காரர் கள் அவர்களைச் சுடடும், 'பயனட்' டினால் குத்தியும் கொன்றார்கள்.

பிறகு அவர்களுடைய உடலைக் கிழித்து, எண்ணெய் ஊற்றி, எரித்து, கடைசியில் மீந்த சாம்பலை ஒரு இரும்புப் பெட்டியில் போட்டு அடைத்தார்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு அந்த உடல்கள் எரிந்த இடத்தில் விலை யுயர்ந்த வைரக்கற்களும், நகை களும் கண்டுபிடித்து எடுக்கப்பட் டன. அப்போது புதிதாக ஏற்பட்ட சோவியத் அரசாங்கம் 'இச்செய் கைக்கும் புதிய அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லை' என்று அறிக்கை வெளியிட்டது. அத்துடன் ஜார் குடும்பத்தினரைச் சுட்டுக்கொன்ற ஐந்து புரட்சிக்காரர்களைக் கைது செய்து அரசாங்கம் அவர்களைச் சுட்டுக்கொன்றது.

1920 ஜனவரியில் ஜார் குடும்பத் தினரின் சாம்பல் ஆங்கிலோ அமெ ரிக்க அரசாங்கங்களின் முயற்சியால் பாரிஸ் நகரத்திற்குக் கொண்டுவரப் பட்டது. சாம்பலுள்ள அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது ராணியின் எரியாத கையின் ஒரு பகுதியும் அதன்விரலிலே திருமண மோதிரமும் இருந்ததைக் கண்ட னர்.

"வாழ்க்கையில் உயர்ந்துவிட்ட வர்களை அசைக்க சுழற்காற்று வீசிக்கொண்டேயிருக்கும். அதிலே அவர்கள் வீழ்ந்தால் சுக்குநூறாகச் சிதறவேண்டியதுதான்" என்று ஷேக்ஸ்பியர் எழுதிய வரிகளை திருப்பித் திருப்பிப் படிப்பானாம் ஜார் மன்னன்.

க. நாராயணன்

ரௌடி ரசகுல்லா!

புத்தூர் பஸ் நிலையத்தில் ரச குல்லாவுக்கு ஏகப்பட்டசெல்வாக்கு! போலீஸ்காரரிலிருந்து, பெட்டிக் கடைக்காரன் வரையில் ரசகுல்லா வின் பெயரைச் சொன்னால் ஒரு தனி மரியாதை கிடைக்கும். அய லூர் பிரயாணி வந்துவிட்டால் போதும்! ரசகுல்லா பாடு யோகம் தான்! வந்தவர்கள் துடியாய் துடித்தாலும் வாங்கவேண்டி. கட்டளைப் பணத்தை வாங்காது விடமாட்டான். பாதாம்கீரில துவங்கி, பனாமா சிகரெட் வரை மூச்சுவிடாமல் விலைகூறுவான்! அது ஒரு பாட்டைப்போலவே இருக் கும். பிரயாணிகள் திணறிப் போவார்கள் அவனுடைய இந்தக் கூச்சல் கேட்டு. மூட்டை சுமப்பதற்கு முடிவான கூலி பேசுவதென்பதே அவனது அகராதியிலே இல்லை. நாலணா என்பான; வேலை முடி யும் கட்டத்தில் எட்டணா என்று அதட்டிக் கேட்பான். தெருவிலே வாதிட விரும்பாதவர்கள் எட்ட ணாவைக் கொடுத்தழுவார்கள். ஒரு சிலர் சண்டைக்கு நிற்கத்தான் செய்வார்கள். மத்தியஸ்தத்திற்கு வரும் போலீஸ்காரனும் ரசகுல்லா வைத்தான் ஆதரிப்பான். இல்லா விட்டால்தான், சப்இன்ஸ்பெக்டர் இல்லாத நேரத்தில் பஸ்நிலையக் கட்டைச்சுவர்களில் போலீஸ்காரர் கள் தூங்கமுடியாதே! தொப்பி காணாமல் போய்விடும். அல்லது இடுப்புக்கசை (பெல்ட்) எங்காவது மறைந்துவிடும்! அத்தனை திரு(ட்டு) விளையாடல்களுக்கும் ஆள் வைத் திருந்தான் ரசகுல்லா! மொத்தத் தில் ரசகுல்லா புத்தூரில் பிரபல ரௌடி!

வெள்ளிப்பட்டயம் கட்டினாற் போல ரசகுல்லாவின் நெற்றியிலே விபூதிப்பட்டையிருக்கும். மத்தி யிலே ஒரு குங்குமப்புள்ளி! பண் டாரச் சன்னதியின் பிரதம சீடனைப் போல காட்சி தருவான். நாட்கள் ஓடின! புத்தூரில் ரசகுல்லாவுக்கு ஒரு வில்லன் முளைத்துவிட்டான். பெயர் மண்ணாங்கட்டி! பலமுறை ரசகுல்லாவுக்கும் மண்ணாங்கட்டிக் கும் தகராறுகள்நடந்திருக்கின்றன இருவருக்கும் வாக்குவாதம் வந்து விட்டால் போகவேண்டிய காலத் தைக்கூட மறந்து காரோட்டிகளும் சூழ்ந்துகொண்டு விடுவார்கள்.

★

ஒருநாள் அவர்களின் வாக்கு வாதம் முற்றிப்போய் விட்டது. கைகலக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

"பேய்பிசாசு என்பது பொய்"- என்றான். மண்ணாங்கட்டி.

"வீராப்பு வேண்டாம் வடக்குத் தெரு புளியமரத்துப் பக்கம் நடு நிசியில் வந்துவிடு பார்ப்போம்" என்றான் ரசகுல்லா.

"பந்தயம் எவ்வளவு?"

"பத்து ரூபாய்!"

குறிப்பிட்ட தினத்தன்று இரவில் மண்ணாங்கட்டி அந்தப்புளிய மரத் தடிக்கு வந்தான். மரத்தின் உச்சி யிலிருந்து ஒரு பேய்க் கூச்சல் கேட் டது. மண்ணாங்கட்டி பயந்து நடுங்கி ஓடினான். பேய் பலமாகச் சிரித்தது. மீண்டும் மரத்தை நெருங்கினான் மண்ணாங்கட்டி! கூச்சல் பெருத்தது! பயங்கர சத்தம்! மண்ணாங்கட்டி யின் அங்கமெல்லாம் ஆடின. கண் களை மூடிக்கொண்டு பக்கத்தில் கிடந்த துண்டுக் கற்களால் மரத் தின் உச்சிக்கு வீசி யெறிந்தான். சத்தம் ஓயவில்லை. தரையில் புரண்டு கொண்டே போய், ரச குல்லா சொல்லியபடிஒருகொம்பை மட்டும் ஒடித்துக்கொண்டு ஓடிவிட் டான் மண்ணாங்கட்டி. அவனுடைய நடுக்கம் தீர மூன்றுமணி நேரம் பிடித்தது.

வெற்றிப் புன்னகையோடு பஸ் நிலையம் ஓடினான். வழக்கமாகப் படுக்கும் ஒட்டுத்திண்ணையில் ரச குல்லாவைக் காணோம்.

மறுநாட் காலை! மண்ணாங்கட்டி, புளியக்கொம்புடன் பஸ் நிலையம் வந்தான். ரசகுல்லா அதே ஒட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். அவனைச் சுற்றிப் பலர் சோகத் துடன் நின்றுகொண்டிருந்தனர். மண்ணாங்கட்டி அருகில் சென்று பார்த்தான். பரிதாபம்! ரசகுல்லா பிணமாகக் கிடந்தான். மண்டை யில் பல ரத்த ஊற்றுக்கள் கண் திறந்திருந்தன.

மண்ணாங்கட்டியின் கண்கள் கலங்கின. கடந்த இரவு நடந்த நிகழ்ச்சியும், தான் மரத்தின்மீது கற்களை வீசியதும் மண்ணாங்கட்டியின் நெஞ்சத்திரையில் நிழல் படமாக ஓடின. தானாக முடிவு செய் தான் மண்ணாங்கட்டி தன்னுடைய கல்வீச்சுதான் ரசகுல்லாவைப் பிண மாக்கிவிட்டதென்று.

ரசகுல்லா இப்படி பலரை பேயின் பெயரால் ஏமாற்றிய கதை மண் ணாங்கட்டிக்குப் பிறகுதான் தெரிய வந்தது.

இலக்கியத்தில் காதல்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

புலவர் தம் பாடலில் உள்ள சிறந்த காட்சியே அவர்க்குரிய பெயராக உருக்கொண்டது.

"கல்பொரு சிறு நுரையார்" என்பது புலவரின் பெயர்.

"காமந் தாங்குமதி
யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ
வனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க்
காணே மாயிற்
செறிதுனி பெருகிய
நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்ல குதுமே."

—(குறுந்தொகை-290).

—ம. ரா. இளங்கோவன்.

வெண்பாப் போட்டி

7 பூவைமே லெத்தனைப் பூ!

வெண்பாப்போட்டி 7-ன், பரிசுபெற்ற வெண்பாக்களேயும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம்: மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்:

◉ எண்ணெயிலே, ஏற்றபூச் சூடவகை யேதுமிலே ;
பெண்கூந்தல் இங்கிலேயில் பேன்பிடிக்க--மண்மீதில்
சாவை அவளண்டி ஏாய்ந்துவிட்டாள் ; பின்னந்தப்
பூவைமே லெத்தனைப் பூ !

—எழில், இராங்கியம்

★

◉ கண்குவளே பல்முல்லே கைகாந்தள் மார்கோங்கு
ஒண்மூக்கெள் பூவித ழோவாம்பல்--முண்டகந்தாள்
கோவைப்பூ கன்னம் குழலில்பூ அப்பப்பா
பூவைமே லெத்தனைப் பூ !

—எம். எஸ். மணி, திருக்கழுக்குன்றம்

★

எள்ளுப்பூ நாசி ! எழிற்கை,செங் காந்தட்பூ !
கள்ளிதழ், ரோஜாப்பூ ! கண்,குவளே !--துள்ளிடைப்
பாவையாள் பல்,முல்லே ! கொங்கை, மரைமொட்டு !
பூவைமே லெத்தனைப் பூ ?

—அ. வேதாசலம், அறந்தாங்கி

★

ஐந்தாண்டுத் திட்டம் அளித்த மலர்காணீர் !
பைந்தெற்குப் பாவைதன் நீள்குழல்--நைந்துவாடச்
சாவையே நோக்கு,மரைச் சாண்கூந்தல் கொள்வடபாற்
பூவைமே லெத்தனைப் பூ

—மு. இளமாறன், மதுரை.

★

சின்னக்கை அல்லி; சிலேமூக்கு எள்ளுப்பூ;
என்னத்தைச் சொல்ல ? இளங்கொடியின்--கன்னத்தில்
தாவியிதழ் பூத்தத் தடவைக் கணக்கிட்டால்
பூவைமே லெத்தனைப் பூ !

க. ராமசாமி, பொறையார்

★

கோங்குசெங் காந்தள் குவளே மரைமுல்லே
ஈங்கிவையோ டெட்பூ வெழிலாகத்--தாங்கிநின்று
காவிலே பூப்பறிக்குங் காட்சிதான் என்னேவிப்
பூவைமே லெத்தனைப் பூ

—கா. நா. விசயராகவன், துறையூர்

★

மூக்கெள்ளுப் பூ,நகைப்பு முல்லேப்பூ; கண்குவளேப்
பூக்கதலிப் பூமுலேகள், பூமுகந்தான்--நோக்குகையில்
பாவைக்கேன் தாழம்பூ ? சிற்றிடையா ளேயையோ
பூவைமே லெத்தனைப் பூ !

—இரா. அன்புரையன், அம்மையப்பன்

★

பூமணக்கப் பூக்கும் புலவர்வாய் பொற்பூரும்
காமணக்குஞ் சோலே க்திர்பூக்கும்--ஏமருங்கும்
கோவையுலா கொள்ளுங் குறள்பூக்கும் நற்றமிழாம்
பூவைமே லெத்தனைப் பூ

ந: சுப்பிரமணியன், சென்னை-12

நீடியகல் ஆறுகளேக் கைகளாக நாட்டியங்கள்
ஆடும் அலேகடலே ஆடையாய்--பாடுகின்ற
பூவைவாழ் பூவனத்தை மேனியாக கொண்டதமிழ்ப்
பூவைமே லெத்தனைப் பூ !

—கி. சித்தாராமன், கரிகாலி

★

சிரிப்பு மறுப்பு சிவப்புத் துவர்ப்பு
வெறுப்புக் களிப்பு மிதப்பு--பொறுப்பு
ஆவதுநீ யென்று அறிவுடையோர் கூறுகின்ற
பூவைமே லெத்தனைப் பூ !

—க. பெரியண்ணன், திண்டுக்கல்

★

அன்னேத் தமிழ்த்தாயின் அங்கமெலாம் அம்மம்ம !
நன்னூலும் குண்டலமும் நீள்புறமும்--பன்மொழியின்
காவைக் களிசெய்யும் பூக்குறளும் காணீரோ !
பூவைமே லெத்தனைப் பூ

—"காமு", வேலூர்

★

வாடாத கஞ்சம் ! வதைக்கின்ற நன்னீலம் !
வீடாத செங்காந்தள் ! வேதனேத்தீ--பாடாகத்
தேவைச் சொரிகின்ற செவ்வல்லி ! நெஞ்சே ! நம்
பூவைமே லெத்தனைப் பூ

—வித்துவான் வெங்கடேசன், நெல்லிக்குப்பம்

★

மல்லிமலர் சம்பங்கி மாமனோ ரஞ்சிதஞ்சேர்
முல்லேமரு தாழையொடு மொய்சுரும்பர்--சில்லோதி
பாவைபோல் முன்னின்றுள் பாகுமொழி யான்கனவில்
பூவைமேல் எத்தனைப் பூ

—க. வீ. வரதன், சென்னை-23

★

குறையொழித்து செல்வம் கொளக்கொடுத்து பார்ப்பார்
மறையொழித்து மேலாம் மதிசேர்--குறளெனும்பூங்
காவைத் தமிழர்க்குக் காட்டுகின்ற செந்தமிழாம்
பூவைமே லெத்தனைப் பூ

—வித்துவான் ச. சுந்தரேசனர், க. புரம்

★

மாவான் புகழ்குறளும் வன்சிலம்பும் இன்னபல
பாவாணர் போட்டநற் பாத்தொடையே--ஓவியமே !
ஆவ லெழுப்பும்பூ ஆ! ஆ! எழிற்றமிழ்ப்
பூவைமே லெத்தனைப் பூ !

—இரா. சண்முகம், பண்ணைக்காடு

★

அச்சமுடன் நாண்மடமும் அன்பாஞ்சொற் றேன்பொழிவான்
இச்சையோ டோர்பயிர்ப்பும் ஏற்றுள்ளாள்--மெச்சுமின
பூவையெண் ணுமலேயே பொய்ப்பூசைச் சூடுமப்
பூவைமே லெத்தனைப் பூ !

—தி. சாமிநாதன், சேங்காலிபுரம்

★

தொல்காப் பியம்நன்னூல் சோழியம் தண்டியகம்
ஒல்காப் புகழ்புறம் ஒண்யாப்புச்--சொல்மீனக்
கோ,வைத்த முச்சங்கம் கூடியிருந் தாய்த்ததமிழ்ப்
பூவைமே லெத்தனைப் பூ

—வி. அண்ணல்தங்கோ, சென்னை-12

★

கண்ணிற் களிப்புக் கனியிதழில் புன்சிரிப்பு
மண்ணில் மலர்குழலி மாண்புபல்--வண்ணமலர்க்
காவைத் தலேசுமத்தல் கண்டார் உரையாரோ
பூவைமேல் எத்தனைப் பூ.

—க. குணசேகரன், சென்னை-3

★

வீட்டிலொடு நெல்லில்லே; வேலேயில் லேஅவன்
காட்டிய காதல னுக்கெனினும்;--நாட்டிற்தம்
தேவை தெரியாமற் செய்யப் பசியுளஅப்
பூவைமே லெத்தனைப் பூ.

—மு. முனியப்ப

◉ பரிசுபெற்ற வெண்பாக்கள்—பரிசு, ஓராண்டு 'தெ

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.எல்.டி,

பதில் தருகிறார்

எம். பாண்டியன், இலங்கை.

ஐயா!, "திராவிடம்! இன்பத்தமிழன் இலக்கணம் கண்டறியாத வார்த்தை! கலிங்கத்துப் பரணியிலே காணமுடியாதது, புறநானூற்றைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் அகப்படாதது! திருக்குறள் ஒருதரமாவது உச்சரித்ததில்லை எனறு எம். ஏ. அப்பாஸ் அவர்கள் அவரின் அபார சிருஷ்டியான "தி. மு. க. தமிழகத்தின் சாபக்கேடு" என்ற நூலில் கூறியுள்ளாரே! இது உண்மையர? தகுந்த விளக்கம் கூறுக.

திராவிடம் என்ற சொல் திராவிட இயக்கம் தோன்றுவதற்கு முன்னேயே பல்வேறு அறிஞர்களாலும் நூலாசிரியர்களாலும் கையாளப் பட்டதுண்டு. மனோன்மணியம் சுந்தரனார், தாயுமானவர், ஆகியவர்கள் வழக்குப் போதிய பழைமை உடையதே. தவிர சிவஞான யோகிகள் சிவஞான போத உரை தமிழராலும் பிறராலும், திராவிடப் பேருரை (திராவிட மாவாடியம்) என்றும் போற்றப்பட்டுள்ளது. இது சமஸ்கிருதத்தில் 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரிலரும் அதற்கு முன் உள்ள புராணங்களும் திராவிடர், திராவிட மொழி, திராவிட நாடு ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

திராவிட மென்ற சொல்லை மறுக்கப் பார்ப்பவர்கள் தனித்தமிழ்ப் பற்றுடையவர்கள் அல்லர். ஆரியர் தரப்பில் உள்ளவர்களே. அவர்களுக்கு இந்தத் தமிழ் மேற்கோள்களும் வடமொழி மேற்கோள்களுமே போதிய விளக்கம் தரத் தக்கவை. கலிங்கத்துப் பரணியும் புறநானூறும் அவர்களுக்கு புராணங்களைவிட உயர்ந்த மேற்கோளாகுமா?

இதே கேள்வியைத் தனித் தமிழரும் கேட்டால், தனித்தமிழ்த் தலைவர் மறைமலை அடிகள் அச்சொல்லையும் பொருளையும் கையாண்டதே அவர்களுக்குப் போதிய விளக்கமாகும்.

தவிர தமிழ் ஒரு மொழியின் பெயராக மட்டுமே இன்று வழங்குகிறது. தமிழுக்கு எதிரான சொற்கள் இன்று ஆரியம் மட்டுமல்ல; ...ாளம், தெலுங்குகூட எதி... சொற்களே. ஆனால் பண்டு ...ற சொல், மொழிகுறித்த ...டுமல்ல; இனம் குறித்த ...ன்றுநாம் திராவிடத்தை ... பொருளிலேயே அது ...டது. தமிழுக்கு எதி... அன்று ஆரியம் ...பொருளில் நக்கீரர் ...குயக்கொண் ...ய பழைய ...ின்றன.

'ஆரியம் நன்று, தமிழ்த்தீது, என உரைத்த' என்று அந்தவெண்பாக்கள் குறிக்குமிடத்தில் ஆரியம் என்ற சொல் இன்று நாம் வழங்கும் பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆரியத்திற்கெதிரான தமிழ் என்பது பொருளால் திராவிடமே.

திராவிட மென்ற சொல்லை தமிழர் தாங்களே பழங்காலத்தில் வழங்காததற்குக் காரணம் அன்று தமிழ் என்ற சொல்லே அந்தப் பொருளில் வழங்கிற்று என்பதே. தமிழர் மொழி பல மொழியான பின், தமிழ்என்ற சொல் மொழியை மட்டும் குறித்தது. இனஞ்சுட்ட முத்தமிழ் என்ற சொல்லும் திராவிடம் என்ற சொல்லும் அறிஞரால் வழங்கப்பட்டன.

இந்தக் கேள்விக்குப் பல மேடைகளிலும் நூல்களிலும் பத்திரிகைகளிலும் விளக்கம் கொடுத்தும் மீண்டும் மீண்டும் பிரசார நோக்கத்துடனும் பொதுமக்கள் எண்ணத்தில் குழப்பமூட்டும் எண்ணத்துடனுமே இதுகேட்கப்படுகிறது. கேள்வி கேட்பதற்குப் பதிலாக தமிழ்ப் பற்றுடையோர் இதன் விளக்கங்களை மக்களிடையே பரப்புதல் வேண்டும்.

ந: துரை, சுல்தான்பேட்டை

அதிர்ஷ்டம் என்பது வட மொழியா, தமிழா, அது வட மொழியாக இருந்தால் அதற்குத் தமிழ்சொல் என்ன?

தாங்கள் 25-12-54 ந் தேதிய தென்றல் இதழில் சொல்லித் தெரிவதல்ல காதல் சுவை என்று ஒரு தோழரின் கேள்விக்குப் பதில் எழுதியிருந்தீரே. நீர்மட்டும் தென்றல இதழில் காரை முத்துப்புலவர் மூலமாக "இலக்கியத்தில் காதல்" என்பதை ஏன் எழுதச் சொல்லி தெரியவைக்கிறீர்? இதற்கு விளக்கம் தேவை.

அதிர்ஷ்டம் என்பது வடமொழிச் சொல்தான். சொல்லின் நேர் பொருள் 'காணாதது' என்பது. அது விதியைக் குறித்து எழுந்தது. தமிழில் அதே கருத்தை எதிர் பாராதது' என்றுகுறிக்கலாம். விதி என்ற பொருளில் தமிழில் அதற்குச் சொல் இல்லை, தமிழர் கருத்தாக அது இல்லாததினால். 'தற்செயலாக,' 'நல்வாய்ப்பாக' என்ற சொற்கள் பகுத்தறிவுடன் அதே சந்தர்ப்பத்தைக் குறிப்பவை ஆகலாம்.

தென்றல் இலக்கியத்தில் காதல் என்ற தலைப்பில் காதலைப் பற்றிய புலவர் வருணனைகளையே தந்தது. காதல் கலையைக் கற்பிக்கவில்லை. தென்றல் வாசகர்கள் கற்பிக்கப் படவேண்டிய நிலையிலும் இருக்க மாட்டார்கள். இலக்கியத்தின்காதல் வருணனைகள் காதல் கலை அறிந்தவர்களுக்கு இன்பம் தரும் கலையே யன்றி காதல் கலை ஆகமாட்டா.

க. மயில்சாமி, கோவை.

தாங்கள் கொண்டுள்ள கருத்துகளுக்கும் திருக்குறள் முரண்தானே? முரண் இல்லையெனில் (1) தென்புலத்தார் (2) தெய்வம் (3) இந்திரன் (4) வானோர் (5) எழு பிறப்பு முதலிய சொற்கள் திருக்குறளில் வரக் காரணம் யாதோ?

உடலானது எண்ணத்தை உண்டாக்குகிறதா? அல்லது எண்ணமானது உடலை உண்டாக்குகிறதா? உடலின் அமைப்பைப் போன்று எண்ணத்தின் அமைப்பும் மாறும் என்றால் இந்த உடலை மாற்றி அமைப்பது யார்? எந்த சக்தி?

நாங்கள் கொண்டுள்ள கருத்துக்களுக்குத் திருக்குறள் முரண் அல்ல. இன்று பலர் கொள்ளும் இடைக்காலக் கருத்துக்கள்தான் திருக்குறளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் ஒருசிறிதும் ஒவ்வாதமுரண்பாடுடையவையாய் இருக்கின்றன. திருக்குறளை ஒரு சிறிது ஊன்றிப் பார்ப்பவர் இதைத் தெளிவாகக் காணமுடியும். உதாரணமாக, 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று பெண்மையைப் பாராட்டியவர், பரிமேலழகர் குறிப்பதைப் போல் 'அறிவுடைய மக்கள் பேறு' என்பதை ஆண்பிள்ளைகள் என்று கொண்டிருக்க முடியாது. அது போலவே, 'ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை, என்று பாடிய திருவள்ளுவர் பொருட்பாலில் அமைச்சரைத் தேர்ந்தெடுப்பதற்கு பொய்யும் காமமும் பயன்படுத்தும்படி கூறி இருக்கமுடியாது.

தென்புலத்தார், தென்னாட்டவர் என்ற பொருளையே நேரடியாகக் குறிப்பது. இது தென்னாட்டவர் புகழ்பேணும் கடமையை வற்புறுத்துகிறது. தென்னாட்டவரின் முன்னோர் பழம் புகழ் என்று இன்றும் கொண்டாலும் தவறில்லை. பிதிரர்கள் என்ற சொல்லும் கருத்தும் திருக்குறளில் எங்கும் கிடையாது. திருக்குறளைப் பரந்த கண்ணோட்டத்துடன் பார்ப்போர்களுக்கு இத்தகைய கீழான ஆரியக் கருத்துக்கும் அவரது சீரிய தமிழ்க்கோட்பாட்டுக்கும் எத்தகைய பொருத்தமும் இல்லை என்பது விளங்கும்.

எழு பிறப்பு ஏழு தலைமுறையைக் குறிக்கும் என்பது கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் தரும் அறிவு விளக்கம். அதுவே பொருந்தமானது என்று நுணுகி ஆராய்ந்தால் தெளிவாகத் தோற்றும். தெய்வமென்பது ஊழின்ஒருபகுதி. அது இயற்கையின் ஆற்றலைக்குறிக்கும்; 'தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்' என்பதன் பொருள், இயற்கை ஆற்றல் எதிரானதாய் இருக்கும் காலத்தில்கூட முயற்சியால்ஓரளவு வெற்றிபெறலாம் என்பதே. இந்திரன், வானோர் என்பவற்றிற்கான வரலாற்று விளக்கம் தென்றல் முன் இதழில் தரப்பட்டுள்ளது.

உடலின் அமைப்பும்எண்ணமும், பொருளும், பொருளின் குணமும் போல ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவை. ஒன்றுக்கொன்று காரணமானவை. ஆயினும் முதலில் உடலமைப்பே எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. புறச்சூழல்களும்இந்த எண்ணத்தை ஓரளவு உருவாக்கவும் மாற்றி அமைக்கவும் பயன்படுகின்றன. இந்த புற இயக்கங்களால் எண்ணங்கள் உடம்பில் மாற்றமும் வளர்ச்சியும் உண்டு பண்ணுகின்றன.

எல்லாஉறுப்புக்களையும்போலவே மூளையும் ஒரு உறுப்பு உறுப்பின் பலத்தால் வேலை செய்கிறோம். ஆனால் வேலை உறுப்பைவளர்க்கிறது. இதுபோலவே மூளையின் அமைப்பால் எண்ணமுடிகிறது. அதே சமயம் எண்ணமே மூளையையும் வளர்க்கிறது.

இவற்றை இயக்கும் சக்தி இயற்கையே. இயற்கையின்பண்பை அறியாதவர் அதற்கு வேறு ஏதேனும் பெயர் கொடுக்கவும் செய்யலாம். உண்மையை இது மாற்றிவிடாது.

★

சூடான்!

அந்த நாட்டில் சிங்காதனங்கள் சங்கப்பலகைகள் மாதிரி. நினைத்தால் ஒருவர் சர்வாதிகாரி. நேற்று இருந்தவர் இன்று இருக்கமாட்டார். இன்று தலைவரானவர் நாளை அரசியல் துறவியாகிவிடுவார். இப்பேர்ப்பட்ட அரசியல் கொந்தளிப்பைக் கொண்டுள்ள எகிப்து நாட்டில் சூடான் பிரச்சினை முளைவிட்டிருக்கிறது. சூடான் எகிப்துடன் இணைந்து வாழ விரும்பவில்லை. தனிச் சுதந்திர நாடாகத் திகழ ஆசைப்படுகிறது. "நாங்கள் ஏன் சுதந்திரமாக வாழக் கூடாது?" என்று கேட்கிறது. ஓய்வுநேரத்தில் நெஞ்சிலே தோன்றியதை யெல்லாம் சட்டமாக்கும் எகிப்திய அரசுக்கட்டில் கூட சூடானின் பேச்சுக்கு செவிமடுத்து ஒரு ஆய்வுக்குழுவை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறது.

ஆனால் இங்கு?

தனி மனிதனுக்கு உணவு இலையெனில் இந்த ஜகத்தையே அழித்திடுவேன் என்று பாட்டுப் பாடி ஆட்டம் போடும் இந்த இந்திய துணைக்கண்டத்து ஆட்சிபீடம் தென்னாட்டைப் பிரிக்கவேண்டும் என்பதற்கு எத்தனை எத்தனை அரசியல் காரணங்களைக் காட்டியும், எத்தனை எத்தனை வடவரின் வஞ்சகத் திட்டங்களை சாட்சிகூற வைத்தாலும் ஊராளவந்த இந்த உத்தமர்களுக்கு கேட்கவில்லை-- இல்லை--காதை மூடிக்கொள்கிறார்கள். ஏன்?

சூடான் காட்டும் சான்றுகளைக் காட்டிலும் நமது சான்றுகள் வைரம் பாய்ந்தவை! உலகம் உள்ளளவும் அழிக்க முடியாதவை! என்றாலும் டெல்லி நித்திரையில் ஆழ்ந்திருக்கிறது. எகிப்தின் திடீர் மாற்றம் கண்டு கிண்டல் செய்து தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் 'தீனதயாளர்'கள் நமது குரலை அலட்சியம் செய்கிறார்கள். இன்னும் எத்தனை நாளைக்கோ?

...Mount Road, Madras-6. Printed